# அரசு ஊழியர்

2021 நவம்பர் மலர்:42 இதழ்:11

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர் : **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி**

இதழ் வடிவமைப்பு:

**ஆர்.காளத்தி** *9677003178*

*ஆண்டுச் சந்தா : ரூ.100*

*தனி இதழ் : ரூ.10*

**முகவரி:** *பழைய எண். 48*
*புதிய எண் 46, தேரடித் தெரு*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** *சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002*


## சூடா ஒரு கோப்பை சூப்

### பிணங்களாய் வாழும் பெருங் கொடுமை!

மாட்டுக்கறி, நீட்டுத் தேர்வு
கூட்டு வல்லுறவு - இவற்றோடு
எரிவாயு, டீசல், பெட்ரோல்
தினசரி விலையேற்றம் என
மொத்தக் கொடுமையும்
நாட்டை ஆள்கிறது!
கொலைகாரர்களின் கையில்
நீதியின் தராசு நீள்கிறது!
சனநாயகத்தின் கழுத்தில்
தூக்குக்கயிறு தொங்குகிறது!
செத்துப் போவதை விடவும்
பிணங்களாய் வாழ்வது இங்கே
பெரிய கொடுமையாய் இருக்கிறது!

*- துரை.சண்முகம்*

தலைவர் மடல்

# நீண்ட மலையேற்றத்தின் நடுவே நிழல் தரும் கனிமரம் 14ஆம் மாநில மாநாடு!

ஒரு நீண்ட நெடிய பயணத்தில் ஒரு சிறிய இளைப்பாறுதல் போலத்தான் அரசு ஊழியர்கள் போராட்ட வரலாற்றில் மாநாடுகளும், கருத்தரங்குகளும், விவாத நிகழ்ச்சிகளும். இதுபோன்ற மாநாடுகள் நம்மை நாமே உற்சாகப் படுத்திக்கொள்கிற நிகழ்ச்சி மட்டுமல்ல. நாம் சென்றுகொண்டிருக்கும் பாதை சரிதானா என்பதை பிறதுறை தோழர்களும் நம்மில் சிலரும் நம்மை உணர வைக்கும் நிகழ்ச்சியாகும். நம்முடைய குறைகளைக் களைந்து போராட்டங்களை வெற்றிகரமாக்கும் வியூகங்களை வகுக்கவும் இதுபோன்ற மாநாடுகள் பயன்படும் என்பதில் ஐயமில்லை. ஒரு வகையில் இது நம்மை நாமே புத்தாக்கம் செய்து கொள்கிற நிகழ்ச்சி.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு ஒற்றை கோரிக்கைக்காக நடக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது நம்முடைய போராட்டங்களைப் பார்த்தும், போராட்ட குணங்களைப் பார்த்தும் நம்முடைய விடாப்பிடியான அணுகுமுறைகளைப் பார்த்தும், திமுக ஆட்சிக்குவந்தால் அரசு ஊழியர்களின் அனைத்து பிரச்னைகளும் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என அறிவித்தார். அந்த ஒற்றைக் கோரிக்கையின் மீதுதான் நாம் இப்போது அனைவருடைய கவனத்தையும் நம் பக்கம் திருப்ப இந்த மாநாட்டை நடத்துகிறோம்.

அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதிப்பலன்கள் கணிசமான அளவுக்கு குறைக்கப்பட்டுள்ள நிலையில் மாநாட்டை நிதிபற்றாக்குறையுடன் நடத்த வேண்டியது அவசியம்தானா என்று ஒரு பக்கம் கேட்கிறார்கள். மறுபக்கம் கடந்த இருபது ஆண்டுகளாக கேட்டுக்கொண்டிருக்கிறோம் பறிக்கப்பட்ட உரிமைகளையும் மறுக்கப்பட்ட சலுகைகளையும். ஆனால் அரசாங்கங்கள் பிடிவாதமாக அவற்றை கொடுக்க மறுப்பதும் எதிர்த்துக் கேட்டால் ஊழியர்களை / நிர்வாகிகளை மிரட்டுவதுமான போக்குதான் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை காரணம் காட்டி, எப்படியும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட உரிமைகளையும் சலுகைகளையும் கொடுக்கப்போவதில்லை அதனால் மாநாடு தேவைதானா என்றுரைப்பதும் நமக்கு புரியாமல்

இல்லை. ஆனால் ஒன்றை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் நமக்கான உரிமைகளை நாம் கேட்காமல் போனால் வேறு யார் கேட்பார்கள்? நமக்கான குறிக்கோளில் விடாமுயற்சியுடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்பது வரலாறுகள் நமக்கு கூறும் கற்பிதங்களாகும். இதுபோன்ற மாநாடுகளை நடத்துவது நாம் புத்தாக்கம் பெறுவதற்காக மட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் போன்றோரை மாநாட்டுக்கு அழைத்து அவர்களுடன் இணக்கமான போக்கை மேற்கொண்டு நமக்கான உரிமைகளை அவர்களிடம் எடுத்துக்கூறி லட்சோப லட்ச ஊழியர்களுக்கான உரிமைகளை பெற்றுத்தருவதும் மாநாட்டின் நோக்கமாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனத் தீர்மானங்கள் என்று ஓடி ஓடி களைத்திட்ட நமக்கு இந்த மாநாடு இளைப்பாறுதல் மட்டும் தரப்போவதில்லை. இன்னும் கூட புத்துணர்ச்சியை அள்ளித் தரும். ஒரு நீண்ட மலையேற்றத்தில் இடையே வரும் சிறு சமதளமாக இந்த 14ஆம் மாநில மாநாட்டை சொல்லலாம். இந்த 14ஆம் மாநில மாநாடு தரும் புத்தாக்கம் மேலும் மேலும் உயரங்களை அடைய உதவியாக இருக்கும். சென்ற ஆட்சியில் நாம் கோரியிருந்த அனைத்து கோரிக்கைகளையும் ஒற்றை கோரிக்கையாக்கி அரசிடம் தந்துள்ளோம். முதல்வரும் அந்த கோரிக்கைகளை பரிசீலித்து முடிந்தவரை செய்வதாக உறுதியளித்துள்ளர். 33 ஆண்டுகால கோரிக்கைகள் 13 ஆண்டுகால பழைய பென்சன் திட்டம் மற்றும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள அகவிலைப்படி, சரண்டர் போன்றவற்றை திரும்பத் தருதல் போன்ற கோரிக்கைகள் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருபவை. கடந்த 34 ஆண்டுகளாக தொடர்ந்து வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகள் நம்முடைய விடாமுயற்சியை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சியாகும்.

விடாமுயற்சியை ஒருபோதும் விட்டுக்கொடுக்காத நபரைப்பற்றி அறிய வேண்டுமென்றால் நாம் வேறெங்கும் தேடவேண்டாம் ஆபிரஹாம் லிங்கன் போதும். வறுமையில் பிறந்த லிங்கன் வாழ்க்கை முழுவதும் தோல்விகளைச் சந்தித்தார். அவர் எட்டுத் தேர்தல்களில் தோற்றார். இருமுறை தொழிலில் திவாலானார். நரம்பு மண்டல பாதிப்புக்கு உள்ளானார். பலமுறை தோல்வியடைந்த அவர் வெறுத்து ஓடியிருக்கலாம். ஆனால் அவர் விலகவில்லை. தளராத உறுதியுடன் போராடினார். இலக்கை அடையும் உறுதியோடு கடமையைத் தொடரும் உணர்வு அவரிடம் இருந்தது. மேலும் உண்மையாக உழைப்பதுதான் தன்னுடைய கடமை என்று நம்பினார். ஆதனால்தான் விடாமுயற்சியுடன் போராடி சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார். அமெரிக்க வரலாற்றில் மகத்தான அதிபர்களுள் ஒருவராக இன்றும் அவர் போற்றப்படுவதற்குக் காரணம் அவருடைய தளராத மன உறுதியும் தவறாத கடமை உணர்வும்தான். அந்த விடா முயற்சியும் தளராத மனமும்தான் அரசு ஊழியர்களின் கைக்கொள்ள வேண்டிய வெற்றியின் பார்முலா.

சென்ற அதிமுக ஆட்சி போலத்தான் இந்த ஆட்சியும். ஆட்சிக்கு வருவதற்காக அதன் திமுக தலைவர் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி வாக்குகளை பெற்றுள்ளதாக சிலபேர் கூறுகிறார்கள். குறைந்த பட்சம் மத்திய அரசு ஊழியர்கள் பெறும் அகவிலைப்படியைக்கூட உங்களால் பெறமுடியவில்லை, புதிய அரசு வந்தால் பாலாறும் தேனாறும் ஓடும் என்று சொன்னீர்கள் இங்கே கூழுக்கே ஆளாய் பறக்க வேண்டியிருக்கிறது என்று ஏளனம் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் தமிழக முதல்வரின் வாக்குறுதி மீது நமக்கு தளராத நம்பிக்கை உள்ளது. சொன்ன வார்த்தையை எப்போதும் காப்பாற்றக்கூடிய நம்பகமான முதல்வர்களில் அவர் முதன்மையானவர் என்று நாம் திடமாக நம்புகிறோம்.

மத்திய அரசு புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அறிவித்தபோது அதை இந்தியாவிலேயே முதலாவதாக அறிவித்த மாநிலமாக தமிழ்நாடு இருந்தது. சில மாநிலங்கள் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்தாத நிலையில், இன்னும் சில மாநிலங்கள் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்த யோசித்துக் கொண்டிருந்த வேளையில், தமிழ்நாடு அரசு மட்டுமே எந்தவித யோசிப்பும் இன்றி குறிப்பிட்ட தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே அதாவது 1.4.2003ஆம் தேதி முதல் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அமல் படுத்தியது. அதை திரும்பப் பெற வலியுறுத்தி கடந்த பதினேழு ஆண்டுகளாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் பணியாளர்களும் அரசுக்கு மனுக்கள், பிரதிநிதித்துவங்கள், கோரிக்கைகள் போன்றவை மூலமாக இயக்கங்கள் நடத்தி வருகிறோம்.

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது.

இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும் அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப்பட்டு பணிசெய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு மத்திய அரசுக்கு இணையான உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் அரசு ஊழியர்கள் போராட்ட களங்களை துறந்துவிட்டு இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக்காப்பதில் தீவிர கவனம் செலுத்துவோம் என்பதில் ஐயமில்லை.

வரலாறுகள் மாறுவதாக கூறப்பட்டாலும் உண்மை நிலை அதுவல்ல. வரலாறுகள் மாற்றியமைக்கப் படுகின்றன. ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு யுத்தி. ஒவ்வொரு போராட்டமும் ஒரு அனுபவம். எங்கே உரிமைகள் சட்டங்களால் மறுக்கப்படும் நிலை உருவாகுமோ அங்கே அவை புரட்சிகளால் உடைக்கப்படும் என்ற உண்மைகளை பல போராட்டங்கள் உணர்த்தியுள்ளன. உரிமை மீட்பு என்று வந்து விட்டால் போராட்டக் களத்திற்கும் போர்க்களத்திற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. அதிகாரவர்க்கம் ஏவும் அடக்குமுறைகளும், அரசாங்கம் கூறும் பொய்யுரைகளும், நீதிமன்றம் போடும் தடைகளும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான சவால்களாக நின்றன. விரோதமோ, துரோகமோ, தடையோ, சிறையோ எந்த சவால்களாக இருந்தாலும் அதை எதிர்கொள்ளும் வீரமும் தீரமும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை 1988, 2003 போராட்டங்களுக்குப் பிறகு 2017ல் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நாம் எல்லோரும் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிப்பதில்லை அவரவர் விருப்பப்படி அவரவர் விரும்பிய கட்சிக்கோ, வேட்பாளருக்கோ வாக்களிக்கிறோம். ஆனால் அரசியல்வாதிகளை பாருங்கள், அவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளை பறிக்கும் வேலையில் வேறுபாடு காட்டாமல் ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயங்களை பேசும் இந்த ஜாம்பவான்கள், அரியணை ஏறிவிட்டால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அற்பப்பதராக நினைத்து தூர வீசி விடுகிறார்கள். நேரில் சென்று முறையீடு செய்வதற்குக்கூட அனுமதிக்க மறுக்கிறார்கள். இருந்தபோதும், இதுகாறும் நாம் அவர்களைத்தான் மாற்றி மாற்றி அரியணையில் ஏற்றி அழகு பார்க்கிறோம். காரணம் நமக்கான உரிமைகளை வழங்கும் இடத்தில் அவர்கள் இருக்கிறார்கள்.

அரசு நமக்கு உறுதியளித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பபெறும் நடவடிக்கைகள், 21 மாத நிலுவைத் தொகையினை பெறுதல், அரசாணை எண்.56ஐ திரும்பப் பெறுதல், 5000 அரசுப்பள்ளிகளை மூடிவிட முந்தைய அரசு எடுத்து வந்த நடவடிக்கைகளை நிறுத்துதல், ஊதிய முரண்பாடுகளை களைதல், காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வரையறுத்தல், அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துதல் போன்றவற்றிற்காக நின்ற நம்மை மாபெரும் போராட்டக்களத்தில் தட்டிக் கொடுத்து அழகு பார்த்தது திராவிட முன்னேற்றக் கழக தலைமை. அதனால்தான் முதல்வர் வந்து மாநாட்டை சிறப்பிக்க வேண்டும் என்று நாள் கிழமை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சாக்ரடீஸ் என்ற ஒரு மேதையைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் எது சொன்னாலும் சிந்தித்து சரியாகத்தான் சொல்வார் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு இளைஞன் பலர் இருந்த சபையில் அவர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அவரை முட்டாளக்க வேண்டுமென்று தன் கையில் ஒரு வண்டை மூடிக்கொண்டு சாக்ரடீஸ் அவர்களைப் பார்த்து, "ஐயா என் கைக்குள் இருக்கும் வண்டு உயிருடன் இருக்கிறதா? அல்லது இறந்து விட்டதா?" என்று கேட்டான். சாக்ரடீஸ் உதட்டிலிருந்து என்ன வார்த்தைகள் வரப்போகிறது என்று எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். அவர் சற்றும் யோசிக்காமல் சொன்னார், "வண்டு உயிரோடு இருப்பதும் இறந்துபோவதும் உன் கையில் இருக்கிறது" என்று. அந்த இளைஞன் அந்தப் பதிலைக்கேட்டு தலை குனிந்தான். இதே போல்தான் நமக்கான நியாயமான உரிமைகள் எனும் வண்டை நாம் உயிருடன் காப்பது நம் கைகளில் இருக்கிறது என்பதை நினைவில் வைத்து அடுத்த கட்ட ஆயத்தங்களுக்கு நம்மை அர்ப்பணிப்போம். போராட்டமும் மாநாடும் நமக்கு வேறு வேறு அல்ல. வெற்றிகான விதைகளை மாநாட்டிலிருந்து பெற்று அவற்றை போராட்டங்களில் விதைப்போம். விளைந்து சமூகத்திற்கு நிழல்தரும் மரங்களாக, பலன்தரும் கனிகளாக இருப்போம். 14ஆம் மாநில மாநாட்டை வெற்றிபெறச் செய்ய திக்கெட்டும் சங்க முழக்கமிடுவோம்.

●



# ஒன்றிய அரசு வேலை நிறுத்த உரிமை பறிப்பு இந்திய மக்கள் மீது தொடர் தாக்குதல்

மோடி அரசு அதிகார வர்க்க கருத்தியலுக்கு உண்மையாக கிட்டத்தட்ட எஸ்மா சட்டம் போன்ற கடுமையான சரத்துக்களை கொண்ட அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசரச் சட்டம் 2021 என்ற கடுமையான சட்டத்தை புறவழியாக கொண்டு வந்துள்ளது.

பாதுகாப்பு சேவைகளை தொடர்ந்து இயக்குவதற்கு என சூழல் குறித்த உண்மைக்கு புறம்பான அறிவிப்பு வெளியிட்டாலும், வெளிப்படையான இந்த சட்டம் வேலை நிறுத்தத்தை தடை செய்யவும், நாடு முழுவதும் 41 பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களை நிர்வகிக்கும் பாதுகாப்பு தொழிற்சாலை போர்டு கலைத்துவிட்டு இந்த தொழிற்சாலைகளை கார்ப்பரேட்டு நிறுவனங்களாக்கி அதன் மூலம் இறுதியில் அவற்றை தனியாருக்கு விற்பதற்கான சட்டத்திற்கு எதிர்ப்பை தடை செய்யவும் இந்த அவசர சட்டம் போடப்பட்டுள்ளது.

இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பானதாகவும், சந்தேகத்திற்கு இடமானதாகவும், ஒரு புறம் இருந்தாலும் அது வெட்கக்கேடான வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களான தொழிற்தகராறு சட்டம் 1947 மற்றும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தொழில் உறவு தொகுப்பு சட்டம் 2020 ஆகியவற்றிற்கு புறம்பாக இருப்பதோடு, அநேகமாக தற்போது நடைமுறையில் இருக்கும் அனைத்து சட்ட பாதுகாப்புகளுக்கும் புறம்பாக உள்ளது. அரசின் நாசகர கொள்கைகளுக்கு குறிப்பான கண்மூடித்தனமான தனியார்மயத்தை எதிராக உள்ள பொதுவான எதிர்ப்பையும், அமைப்பு ரீதியான திரண்டுள்ள தடைகளையும் நசுக்குவதே இதன் நோக்கம்.

அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசர சட்டம் 2021 ஜூன் மாதம் 30ம் தேதி உடனடியாக அமுலுக்கு வருவதாக பிறப்பிக்கப்பட்டது. நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் மோடி அரசு அரசிதழ்(கெசட்)அறிக்கை முரணாக தெரிவிப்பது என்னவெனில் குடியரசுத் தலைவர், இந்த சட்டத்திற்கான சூழல் குறித்து திருப்தி கொண்டுள்ளார். நாம் நினைவில் கொள்ள வேண்டியது இந்த அவசரச் சட்டம் ஒன்றிய அரசு தீவிரமாக பாதுகாப்பு தளவாட தொழிற்சாலைகள், வாரியத்தை கலைத்து விட்டு கார்ப்பரேட் மயமாவதாக அறிவிப்பு வெளியிட்ட சில வாரங்களில் பாதுகாப்பு தளவாட சிவில் தொழிலாளர்கள் ஜூலை-26 வேலை நிறுத்த நடவடிக்கைக்கு போவதென்ற முடிவை எதிர்ப்பார்த்தே இந்த சட்டம் கொண்டுவரப்பட்டுளளது.

இந்த அவசர சட்டம் பாதுகாப்பு தொழிலாளர் மற்றும் பாதுகாப்பு தொழிற்சாலைகளின் வலைப்பின்னலில் கார்ப்பரேட் வழியாக தனியார்மயமாக்குவதற்கு எதிரான வேலை நிறுத்தம் என்று முடிவை சீர்குலைக்கவும், அதனை தடுப்பதற்கு மட்டுமல்ல, அது பாதுகாப்பு தளாவட உற்பத்திதுறைகளோடு நின்றுவிடாமல், அது அரசு நிர்வாகம் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தின் வேலை நிறுத்தம் உட்பட அனைத்து கூட்டு செயல்பாட்டையும் தடை செய்திடும நோக்குடன்

வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டம் எந்த ஒரு துறையிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் உரிமையாக நியாயமான காரணங்களுக்குக்கான கூட்டாக செயல்படுவது, சட்டவழி முறைகளுக்கு உட்பட்டு எந்த வடிவிலாவது போராடுவது போன்றவற்றிக்கு எதிராக தடையை நீடித்திட வழி செய்திடும் அதிகாரத்தை வழங்குகிறது. அந்த தொழில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த வகையிலாவது அது பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிலையங்களோடு தொடர்புடையது என கருதும் பட்சத்தில் அந்த சட்டம் பொருந்தும் ஒரு தொழில் பாதுகாப்பு தொழிலோடு சம்பந்தப்பட்டது என முடிவு செய்யும் அதிகாரம் முழுமையாக ஒன்றிய அரசிடம் மட்டுமே உள்ளது.

இந்த அவசர சட்டம் ஒன்றிய அரசிற்கு வேலை நிறுத்தங்களை( வேலை நிறுத்தம் என்ற வார்த்தை பயன்படுத்தவில்லை) இங்கு வித்தியாசமாக பயன்படுத்தபட்டுள்ளது. லாக்-அவுட் மற்றும் லே-ஆப் போன்றவைகளை அத்தியாவசிய பாதுகாப்பு தளவாட உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் தடைசெய்யும் அதிகாரம் அளிக்கிறது. ஆகவே தீங்கு விளைவிக்கும் இந்த சட்டம் வேலை நிறுத்தம் என்பதற்கு பதிலாக புதிய வார்த்தையை கண்டுபிடிக்க தொடங்குகிறது.

ஒன்றிய அரசின் இந்த அவசரச் சட்டம் கற்பனை வளத்துடன், உள் நோக்கத்துடன் வேலை நிறுத்தம் அதனுடன் தொடர்புடைய அனைத்து விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மற்றும் போராட்டங்களையும் இந்த வரையறைக்குள் அடக்கியுள்ளது. இந்த சட்டம் வேலை நிறுத்தம் என்பதற்கு கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது. 1) வேலை யை நிறுத்துவது, 2)மெதுவாக வேலை செய்வது (கோ.ஸ்லோ), 3)தர்ணா(சிட்டவுன்), 4) உள்ளிருப்பு போராட்டம்(ஸ்டே-இன்), 5) அடையாள வேலை நிறுத்தம், 6) ஆதரவு வேலை நிறுத்தம், 7) ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு எடுப்பது அத்தியாவசிய பணிகள் என்று சொல்லப்படும் பணியில் ஒரு அமைப்பின் தொழிலாளர்கள்(சங்கம்) கூட்டமாக செயல்படுவது அல்லது ஒருங்கிணைந்து மறுத்தலிப்பது அல்லது பொதுவான புரிதலின் அடிப்படையில் (ஆணையை) மறுப்பது, எத்தனை நபர்களாக இருந்தாலும் என விரிவுப்படுத்தப்பட்டுள்ளது . இங்கு ஓவர் டைம் பார்க்க மறுப்பதையும், வேலை நிறுத்தம் என கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரி அத்தியாவசியப் பணி என்று சொல்லப்படும் பணியில் மறுப்பதன் காரணமாக அந்த வேலை தடைப்படும் என நினைத்தாலோ அல்லது உண்மையில் தடைப்பட்டாலோ அல்லது வேலையின் வேகம் குறைந்தாலோ அல்லது வேலையில் தடைகள் ஏற்பட்டாலோ வேலை நிறுத்தம் செய்ததாக கருதப்படும்.

1947ம் வருடத்திய தொழில் தகராறு சட்டம் வேலை நிறுத்தம் என்பதை சுருக்கமாக வேலையை நிறுத்துவது என்று மட்டுமே வரையறுத்துள்ளது. வேறு எந்த வரையறையும் கிடையாது. ஒருங்கிணைந்து 51 சதவிதத் தொழிலாளர்கள் தற்செயல் விடுப்பு எடுப்பது என்பதை வேலை நிறுத்தம் என்பதோடு இணைந்துள்ளது. ஆனால் இந்த அவசர சட்டம் வழக்கமான வேலை நிறுத்தம் என்பதற்கான வரையறையிலிருந்து நீண்ட தூரம் விலகி செல்கிறது. கிட்டத்தட்ட அனைத்து விதமான நடவடிக்கைகளையும், குறிப்பாக நடவடிக்கைக்கு தூண்டுவது, கிளர்ச்சி பிரச்சாரம்(அனைத்து பிரச்சாரம் போராட்ட நடைமுறைகள், எதிர்ப்பியக்கங்கள் ஆகிய எல்லாமே வேலை நிறுத்தம் என்ற வரையறையில் ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது. இது தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் என்ன வரப்போகிறது என்பதை கட்டியம் கூறும் வகையில் உள்ளது. இது ஒட்டு மொத்தமாக தொழிற்சங்க நடவடிக்கையை முடக்குகிறது.

அவசரச் சட்டத்தில் அத்தியாவசிய பணி பாதுகாப்பு பணிகள் என்பதன் அர்த்தம் என்ன? அத்தியாவசியப் பணிகள் என்பதற்கான வரையறை அது பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் சேவைகளோடு கொண்டுள்ள தொடர்பு ஆகியவை விரிவுப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட அனைத்து தொழில்களையும் இந்த வரையறைக்குள் கொண்டு வந்து தொழிலாளர்கள், ஊழியர்களின் உரிமைகளையும் நசுக்க அரசுக்கு இந்த அவசரச் சட்டம் அதிகாரமளிக்கிறது.

இந்த அவசரச் சட்டத்தின் பிரிவு 3ன்படி ஒன்றிய அரசுக்கு வேலை நிறுத்தத்தை தடை செய்து ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் கீழ்க்கண்ட நலன்களை முன்னிறுத்தி 1) இந்தியாவின் சுயாதிபத்தியத்தையும், ஒற்றுமையையும் காக்க 2) நாட்டின் பாதுகாப்பை

உறுதி செய்ய 3) பொது அமைதியை காக்க 4) பொது நலன் கருதி 5) நாகரீகம் கருதி 6) ஒழுக்கம் காக்க இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டால் அது 6 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். மேலும் 6 மாதங்களுக்கு அதனை நீட்டிக்கலாம், வேறெந்த சட்டத்திலும், தொழிலாளர் வர்க்கம் தனது கடைசி ஆயுதத்தை வேலை நிறுத்த உரிமையை பறிக்க அப்படிப்பட்ட பலவீனமான காரணங்களை நாம் பார்க்க முடியாது.

ஆகவே ஒன்றிய அரசு எந்த தொழிற்சாலை பிரிவதும், பாதுகாப்புத் தளவாட தொழிற்சாலைகளுக்கு மின் உற்பத்தி, கனிமவளம் அல்லது வேறெந்த தெழிற்சாலையையும் அத்தியாவசிய பாதுகாப்பு சேவை என்று அறிவித்து அந்த தொழிலகங்களில் வேலை நிறுத்த தடை , தொழிலாளர் உரிமைகளுக்கு தடை, இயல்பான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றை தடை செய்ய கட்டுபாடற்ற அதிகாரத்தை இந்த அவசரச் சட்டம் வழங்குகிறது. ஆகவே வேலை நிறுத்தத்தை தடை செய்யும் அரசின் கரங்கள் மிகவும் ஆபத்தான வகையில் எந்த தொழிற்சாலைக்கும் நீட்டிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

“சட்டவிரோத வேலை நிறுத்தத்தில்” என்று சொல்லப்படுவதில் தொடங்கும் மற்றும் பங்கு வகிக்கும் நபர்களுக்கு தண்டமையாக ஓராண்டு சிறை அல்லது ரூ.10,000/- அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து இதனை தூண்டுபவர்கள் கிளறிவிடுபவர்கள் அல்லது இந்த சட்டவிரோத வேலை நிறுத்தத்தை தொடர் நடவடிக்கை எடுப்பவர்களுக்கு (இதனை வழக்கமான வேலை நிறுத்தத்துடன தொடர்புடைய தொழிற் சங்க நடவடிக்கையான பிரச்சார நடவடிக்கை என புரிந்து கொள்ள வேண்டும்) அல்லது தெரிந்தே அந்த நோக்கங்களுக்காக பணம் கொடுப்பவர்கள் போன்றவர்களுக்கு தண்டனையாக 2 ஆண்டு சிறை அல்லது ரூ.15,000/- அபராதம் அல்லது இரண்டும், இதற்கு மேல் சம்பந்தப்பட்ட தொழிலாளி ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பணி நீக்கம் செய்யப்படலாம். இந்த அவசரச் சட்டத்தின் மூலம் குற்றம் என அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து செயல்களும் பிணையில் வெளியில் வர முடியாத பெரும் குற்றமாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் வேலை உரிமை, நிண்டகாலம் மனிதத் தன்மையற்ற முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக போராடி பெற்ற உரிமைகளுக்கு அதன் பிறகு தொழில் தகராறு சட்டம் 1947 மற்றும் தொழிற்சங்க சட்டம் 1926 ஆகியவை வேலை நிறுத்த உரிமை அங்கீகரித்தன. தொழில் தகராறு சட்டம் பொது பயன்பாடடு துறைகளில் வேலை நிறுத்தம் செய்வதற்கு சில வழி முறைகளை வைத்துள்ளது. அது ஒட்டுமொத்தமாக வேலை நிறுத்தத்தையே இந்த அவசரச் சட்டம் போல் தடை செய்யவில்லை. இந்த சட்டம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 87,98 ஆகியவற்றின் முடிவுகளை அப்பட்டமாக மீறுகிறது. (சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் கூட்டுபேர உரிமை)

ஆகவே, அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசரச் சட்டம் என்பது கார்ப்பரேட் ஒன்றிய அரசின்(மோடி) விரிவான அளவில் முதலாளித்துவ அமைப்பின் மிருகத்தனமான சுரண்டலிலிருந்து தொழிலாளர்கள் தங்களை சங்கம் அமைத்து காத்துக்கொள்ளும் அடிப்படை உரிமைகளை தகர்த்து எறியும் வடிவத்தை கொண்டுள்ளது. இது தொழிலாளர்களின் உரிமைகளை பல மடங்கு அதிகமாக உரிமை பாதுகாப்பு சட்டமாகும் இந்த சட்டத்தின் நோக்கம், பாதுகாப்புத் துறையுடன் நின்றுவிடுவதில்லை.இந்த சட்டத்தை ஊன்றி படித்தால், எந்த தொழிற்சாலைக்கும் இதனை அமுல்படுத்தவும், எல்லா இடத்திலும் தொழிற்சங்கத்தை கட்டுபடுத்தவும், தொழிற்சங்க நடவடிக்கையை தடைசெய்யவும் அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருப்பது காணலாம். அரசு ஏற்கனவே அந்த பாதையில் அடியெடுத்து வைத்துக்கொண்டிருக்கிறது.

இந்திய தொழிலாளர் வர்க்கத்திற்கு இவ்வாறான நிகழ்வுகள், புதியவை அல்ல. சுதந்திர இந்தியாவில் கடந்த காலங்களில் பல சமயங்களில் அரசாங்கங்கள் இத்தகைய பயங்கர சட்டங்களை கொண்டு வந்துள்ளதை நம்மால் நன்கு நினைவு கூற முடியும், 61 ஆண்டுகளுக்கு முன் நாடு தழுவிய அளவில் ஒன்றிய அரசு ஊழியர்கள்(மத்திய அரசு ஊழியர்கள்) ஜூலை-11,12 தேதிகளில் நடத்திய மகத்தான வேலை நிறுத்தத்தின்போது ஒரு அவசரச் சட்டம்(எஸ்மா) பிரகனப்படுத்தப்பட்டது.(2003ல் தமிழகத்தில் அரசு ஊழியர்-ஆசிரியர்கள் போராட்டம் - 1.76லட்சம் பேர் பணி நீக்கம் - அப்பொழுதும் இந்த எஸ்மா சட்டம் பாய்ந்தது) இதை போன்ற இதர அவசர சட்டங்களும், நாடாளுமன்றம்

நிறைவேற்றிய சட்டங்களும் உண்டு (உ.தா) இந்திய பாதுகாப்புச் சட்டம்(டிஐஆர்) மிசா சட்டம் (உள்நாட்டு பாதுகாப்பு அமலாக்கச் சட்டம்)போன்ற சட்டங்கள் ஜனநாயக இயக்கங்களையும், தொழிலாளர் வர்க்க இயக்கங்களையும் ஒடுக்கிட கருவிகளாக பயன்படுத்தப்பட்டன. ஆனால் அவை யாவும் இந்திய தொழிலாளி வர்க்க இயக்கம் ஒன்றுபட்ட தடைகளை தகர்த்தெரிந்து போராடுவதை தடுக்க இயலாமல் போனது. கடந்த காலங்களில் தொழிலாளி வர்க்கம் இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டது.இந்த முறையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வல்லமை தொழிலாளி வர்க்கத்திற்கு உண்டு என்பதில் ஐயமில்லை. ஆகவே தொழிலாளி வர்க்க இயக்கம் தற்போதைய அரசின் இத்தகைய விஷமத்தனங்களை ஏற்கவும் போவதில்லை, தொழிலாளி வர்க்கம் போராடிப்பெற்ற உரிமைகளின் மீதான தாக்குதலை படுத்துக்கொண்டு வேடிக்கை பார்க்கவும் போவதில்லை. அவர்கள் தங்கள் மீது அடிமைச் சாசனம் புகுத்தப்படும் தீங்கான நோக்கங்களை சகித்துக் கொண்டிருக்கவும் போவதில்லை. நமது உரிமைகள் மீது தாக்குதல் வரும்போது கடுமையாக போராட்டம் நடத்தி கடும் எதிர்ப்பு காட்டுவதுமே நமக்கு முன்னுள்ள ஒரே வழி. இந்த தாக்குதல் நமது உரிமைகள் மீது மட்டும் வரவில்லை.நமது நாட்டு உற்பத்தி வளங்களை, அரசு துறைகளை ஏலம் விடுவதற்கும், விற்பதற்குமான தேசவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது. கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் தொழிலாளி வர்க்க இயக்கங்கள் தங்களை அந்த வழிக்கு தயார் செய்து கொள்ள வேண்டும்.

#### ஒன்றிய அரசு புதிய சாதனை

மோடி அரசு பெட்ரோல் விலையைத் தொடர்ந்து டீசல் விலையையும் ரூ.100க்கு மேல் ஏற்றி புதிய சாதனை படைத்திருக்கிறது. ஏற்கனவே பட்டினி நாடுகளில் 101 ஆவது இடத்திற்கு வீழ்ந்திருக்கிறது. இதன் மூலம் சமீப நாட்களில் மட்டும் இந்த முப்பெரும் சாதனையை ஒன்றிய அரசு எட்டிபிடித்துள்ளது.

மோடி அரசின் ஒவ்வொரு சாதனையும் மக்களுக்கு சொல்லொண்ணா வேதனைகளை தருகிறது என்பது எதார்த்தம். அந்த வரிசையில் தற்பொழுது டீசல் இணைந்திருக்கிறது. இந்தியாவில் பெட்ரோலியப் பொருட்களின் நுகர்வில் 38 சதவீதம் டீசல் ஆகும். மீதமான மொத்த வரியில் 71.8 சதவீதம் ஒன்றிய அரசின் வரியாகும். போக்குவரத்து தொழில் மற்றும் விவசாயத்தில் பயன்படுத்தப்படும் முக்கிய எரிபொருளாக இருக்கும் டீசல் மீது இயன்றளவிற்கு வரியை உயர்த்த வேண்டிய தேவை என்ன?

உலக பொருளாதாரம் கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வருவதற்கான சூழல் உருவாகி உள்ள நிலையில் இந்திய பொருளாதாரத்தையும் மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு ஒன்றிய அரசிற்கு இருக்கிறது. அதற்கு மக்களின் கையில் பணப்புழக்கத்தை அதிகரிக்க வேண்டும். பணப் புழக்கம் அதிகரிக்கும்போது செலவு செய்யும் திறனும் அதிகரிக்கும். அதன் மூலம் பொருளாதாரம் சீரடையும்.அதற்கான எந்த முயற்சியும் ஒன்றிய அரசு எடுக்கவில்லை. சாதாரண செருப்பு அணிந்தவர்கள் கூட இனி விமானத்தில் செல்ல முடியும் என்றார் மோடி. ஆனால் உண்மை என்ன விமான எரிபொருளைவிட பெட்ரோலிய விலையை 33 சதவீதம் உயர்த்தி செருப்பு அணிந்தவர்கள் சாலையில் கூட செல்ல முடியாத நிலையை உருவாக்கியிருக்கிறார்.

2014ல் பெட்ரோல் மீது ஒன்றிய அரசின் வரி ரூ.9.20 ஆக இருந்தது. 2020ல் ரூ.32.90 ஆக உயர்த்தியிருக்கிறது.அதேபோல் டீசல் மீது ஒன்றிய அரசின் வரி 2014ல் ரூ.3.46 ஆக இருந்தது. 2021ல் ரூ.31.80 உயர்த்தியிருக்கிறது. கடந்த 7 வருடத்தில் மட்டும் பெட்ரோல் மீது 258 விழுக்காடும், டீசல் மீது 819 விழுக்காடும் ஒன்றிய அரசின் வரியை உயர்த்தியிருக்கிறது. கடந்த ஆண்டு மட்டும் பெட்ரோலிய பொருட்களின் மீதான வரிகள் மூலம் ரூ.3.61 லட்சம் கோடி கூடுதலாக மக்களிடமிருந்து ஒன்றிய அரசு பறித்திருக்றிது. நுகர்வோர் செலவு செய்யும் விகிதம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் 2017-18 ஆம் நிதியாண்டில் கடுமையாக சரிந்தது. அதிலிருந்து தேசிய மாதிரி ஆய்வில் நுகர்வோர் செலவு குறித்த ஆய்வறிக்கையை வெளியிடுவதை மோடி அரசு நிறுத்திவிட்டது. புள்ளி விபரங்களை மூடி மறைப்பதன் மூலம் மெய்யை ஒரு போதும் பொய்யாக்கிட முடியாது.

“வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லைக் கெடும்” என்கிறார் திருவள்ளுவர். அதாவது குடிமக்கள்

அஞ்சும்படியான கொடுமைகளைச் செய்து ஆளும் கொடுங்கோல் அரசனானால், அவன் ஆட்சி விரைந்து அழிவது உறுதி என்கிறார். அதுபோல் மக்களின் மீது அனுதினமும் கடுமையான சுமைகளை எற்றி வஞ்சிக்கும் ஒன்றிய அரசு விரைந்து வீழ்வது உறுதி.

**அரசாங்கம் எதற்கு ?**

இந்திய பாதுகாப்புத் துறையை 7 கூறுகளாகப் போட்டு கார்ப்பரேட்டுகளுக்கு காவு கொடுக்கும் நிகழ்ச்சியைக் கொண்டாடுவது என ஒன்றிய அரசு (மோடி) முடிவு செய்திருக்கிறது. அதற்கு பாதுகாப்புத்துறை ஊழியர்கள் கருப்பு பட்டை அணிந்து குடும்பத்தோடு எதிர்ப்பு தெரிவிப்போம் என அறிவித்தார்கள்.

காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் பாதுகாப்புத் துறையில் அந்நிய முதலீடு என்றபோது, தேச பாதுகாப்பு பறிபோய்விடும் என போலியாக கண்ணீர் வடித்தது பா.ஜ.க. ஆனால் இன்று அதிகாரத்திற்கு வந்தவுடன் நாட்டின் பாதுகாப்பை நல்ல விலைக்கு விற்கத் துடியாய் துடித்துக்கொண்டிருக்கிறது.ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம் என்றார் மகாகவி பாரதி. ஆனால் இன்று ஒன்றிய அரசு (பா.ஜ.க.) ஆயுதம் செய்யும் தொழிற்சாலையையும் விற்போம் என்கிறது.

சொல் ஒன்றும் செயல் ஒன்றாக இருப்பதுதான் ஒன்றிய அரசின் தனிச்சிறப்பு. 2018ல் 221 ராணுவ தளவாடங்களை மேக் இன் இந்தியா திட்டத்தின்கீழ் 2020க்குள் தயாரிப்போம் என்றது. ஆனால் அது நிறைவேறவில்லை.அடுத்து ஆத்ம நிர்பார் சுயவார்பு இந்தியா என்றது அடுத்ததாக பாதுகாப்புத் துறையில் நேரடி அந்நிய முதலீட்டை 49 விழுக்காட்டிலிருந்து 74 விழுக்காடாக அகல திறந்துவிட்டது.

ஆடத் தெரியாதவர் தெரு கோணல் என்று சொல்வது போல் தற்போது அரசு ராணுவ உற்பத்தி சாதனங்கள் சரியில்லை என மோடி அரசு கூறுகிறது. தனியார் உற்பத்திதான் தலை சிறந்தது எனக் கூச்சலிடுகிறது. மும்பை தாக்குதலில் தீவிரவாத தடுப்பு காவல் துறைத் தலைவராக இருந்த ஹேமந்த கார்ககரே அணிந்திருந்த புல்லட் புரூப் ஜாக்கெட்டும் தனியார் நிறுவனம் தயாரித்ததுதான. துப்பாக்கி குண்டு வந்தபோது அதன் தரம் எங்கே போனது?

இந்தியா இதுவரை ஐந்து போர்களைச் சந்தித்திருக்கிறது. இந்த போர்களில் வெற்றி பெறுவதற்கு பேருதவியாக இருந்தது அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத தளவாடத் தொழிற் சாலைகள்தான். கார்கில் போரின்போது தனியாரிடம் போட்ட 129 ஒப்பந்தகளை வழங்கவில்லை. போர் முடிந்த பின்னரே வந்தன என்ற ஒன்றிய தணிக்கைத்துறை அம்பலப்படுத்தியது. அது மட்டுமல்ல கார்கில் போரில் சவப்பெட்டியிலும் ஊழல் செய்து சாதனை படைத்தது பா.ஜ.க. அரசுதான். தற்போதும் கூட ரபேல் விமான பேர ஊழில் நாற்றம் பிரான்ஸ் வரை நீண்டிருக்கிறது பத்திரிகையில் வருகிறது.

வாஜ்பாய் ஆட்சியில் பி.எஸ்.என்.எல். முதலில் இதே போன்று தனி கார்ப்பரேஷனாக மாற்றப்பட்டு படிப்படியாக மூடப்பட்டது. பின்னர் ரிலையன்ஸ் அம்பானிக்கு மடைமாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று இந்திய ராணுவ உற்பத்தி தளவாடங்களை அம்பானி, அதானிக்கு மடைமாற்றிடும் முயற்சியின் முதல்படி தான் கார்ப்பரேஷன் என்கிற கள்ளக்கூட்டு. ராணுவம், தொலைத்தொடர்பு, விமானம், துறைமுகம் என அனைத்தும் தனியார் என்றால் எதற்கு இங்கு அரசாங்கம் ?

**மனித உரிமை மீறல்கள்**

இந்திய தேசத்தில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துக்கொண்டு வருகிறது என்று பத்திரிக்கையில் செய்திகள் வருகிறது.ஒன்றிய அரசு (மோடி) அரசமைப்புச் சட்டத்தின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களையும் வீழ்த்திக்கொண்டு வருகிறது. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 28வது நிறுவன நாளில் பிரதமர் நரேந்திரமோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பங்கேற்றனர். பிரதமர் அவர்தம் உரையில் மனித உரிமைகள் என்பது எப்படி பார்க்கப்பட வேண்டும் என்று பேசினார். மனித உரிமைகள் குறித்து இவர் தங்கள் சுயநலன்களின் அடிப்படையில் வியாக்கியானம் அளித்து வருகிறார்கள் என்றும், இவர்கள் தங்களின் அரசியல் மற்றும் சொந்த அரசியல் லாப நட்டக் கணக்கிற்கேற்ப தங்கள் சொந்த முப்பட்டை கண்ணாடி வழியாக மனித உரிமை மீறல்களை பார்க்கிறார்கள் என்றும், இது மிகப்பெரிய வரம்பு மீறலாகும் என்றும் பேசியுள்ளார்.

ஒன்றிய அரசு சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லீம்கள், தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீதான மனித உரிமை மீறல்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. பல்வேறு விதமான சிறுபான்மையினர்களை அவர்கள் மதச் சிறுபான்மையினர்களாக இருக்கலாம், அல்லது மொழி சிறுபான்மையினர்களாக அவர்களின் அனைவரின் உரிமைகளை எப்படி காக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டதே ஜனநாயகம் ஆகும். ஆனால் இவர்களின் இந்துத்துவா ஆட்சியில் உரிமைகள் என்றால் அது பெரும்பான்மையினரின் உரிமைகள் மட்டுமேயாகும். மத்தியப்பிரதேசம் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளின் உள்துறை அமைச்சர் கூட சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை நியாயப்படுத்துகிறார். சமீபத்தில் இந்தூரில் கல்லூரி ஒன்றில் நடைபெற்ற நடன நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டார்கள் என்பதற்காக நான்கு முஸ்லீம் மாணவர்களும், இளைஞர்களும் கைது செய்யப்படடதாகும்.

தற்போது Ոசிՙ மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் நீதிபதி அருண்குமார் மிஷ்ரா தன் உரையின்போது ஜம்மு-காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அமைதி நிலைமையை உருவாக்குவதற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா அயராத முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகக் கூறி அவர் ஒரு புதிய யுகத்தினை ஏற்படுத்தியிருப்பதாக வெகுவாக பாராட்டியிருக்றார். இதில் இருந்து என்ன தெரிகிறது. அனைத்து அம்சங்களிலும் ஒத்துக்போகக்கூடியவர் என்று தெள்ளதெனிவாக தெரிகிறது.

சமீப காலங்களில் மனித உரிமை மீறலில் அதிகமான அளவிலும் தீவிரமான விதத்திலும் நடந்திருப்பது எது என்றால் அது. ஜம்மு-காஷ்மீர்தான் அரசமைப்பு சட்டம் 370வது பிரிவை ரத்து செய்து மாநிலத்தை பிரித்து அங்கே கடுமையாக நடவடிக்கைகள் எடுத்த பின்புதான் மனித உரிமை மீறல்கள் அதிக அளவில் நடத்துள்ளன. ஜம்மு-காஷ்மீரின் நிலைமைகள் குறித்து ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைக்கான உயர் ஆணையர் மிஎசல்பாச்சிலெட் (Michelle Bachelet) செப்டம்பர் 13 அன்று நடைபெற்ற மனித உரிமைகள் கவுன்சில் 48வது அமர்வில் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறார். அதில் உரையாற்றும்போது ஜம்மு-காஷ்மீரில் பொது மக்கள் கூடுவதில் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன. தகவல் தொடர்பு சாதனங்கள் அடிக்கடி இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. தங்களின் பேச்சு உரிமையை வெளிப்படுத்தியதற்காக நூற்றுக்கணக்கானவர்கள் சிறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஊடகவியலாளர்கள் மீதான நிர்பந்தங்கள் நாளும் அதிகரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். மேலும் அவர் இந்தியாவில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடைச் சட்டம் பயன்படுத்தும் விதம் குறித்தும் தன் மன உளைச்சலை வெளிப்படுத்தி இருக்கிறார். நாட்டில் அதிகமான அளவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது ஜம்மு-காஷ்மீரில்தான் என்றும் கூறியிருக்கிறார்.

இது குறித்து இந்திய அரசாங்கத்தின் செய்தி தொடர்பாளர் மறுக்கவில்லை. ஆனால் தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைவர் நீதிபதி மிஷ்ரா தன்னுடைய உரையில் இந்தியாவிற்கு ஏதிராக மனித உரிமை மீறல்கள் குறித்த பொய்புகார்கள் அளிப்பது வெளிநாட்டு சக்திகளுக்கு வழக்கமாக மாறியிருக்கிறது என்றும் இவை எதிர்க்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். நீதிபதி மிஷ்ராவுக்கு ஐ.நா. மனித உரிமை அமைப்பே பொய்புகார்கள் அளித்திடும் வெளிநாட்டு சக்தியாக தெரிகிறது.

இத்தகைய பேர்வழி தலைவராக உள்ள தேசிய மனித உரிமைகள் ஜனநாயகத்திடம் இருந்து நாட்டு மக்களின் அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்திடும் என எப்படி எதிர்பார்க்க முடியும் ? எதார்த்த நிலைமை என்னவென்றால் இந்துத்துவா எதேச்சதிகார ஆட்சியின் கீழ் நாட்டு மக்களின் அனைத்து விதமான அடிப்படை உரிமைகளும் திட்டமிட்டு படிப்படியாக பெரிய அளவில் மீறப்படுகின்றன என்பதும், இதற்கு தேசிய மனித உரிமைகள் ஆணையமும் பலியாக இருக்கிறது என்கிறது பத்திரிகை செய்தி.

ஆகவே தோழர்களே, மககள் விரோத, ஊழியர் விரோத இந்த கார்ப்பரேட் அடிமை ஒன்றிய அரசாங்கத்தின் நடவடிக்கையை அம்பலப்படுத்திடவும், தொழிலாளர் வர்க்கத்துடன் நாமும இணைந்து போராடி தடுத்திட முன்வர வேண்டும்.

ஒன்றுபடுவோம்! போராடுவோம்! வெற்றிபெறுவோம்!

கட்டுரை



# மதுவைவிட மலிவானதா பெண்ணின் வாழ்க்கை

- கோ.பழனியம்மாள்

கரோனா பரவல் காரணமாக உலகம் முழுவதும் உயிரச்சம் இருக்கும் நிலையிலும் குடும்ப வன்முறை மட்டும் கொஞ்சமும் குறையவில்லை. ஊரடங்கின் காரணமாக மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கும் நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, குடும்ப வன்முறைகள் மேலோங்கி வருகின்றது. ஏற்கனவே பொருளாதாரரீதியான தாக்குதலைச் சந்தித்துவரும் பெண்கள், வன்முறையால் உடலாலும் மனதாலும் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். ஆனால், அந்தப் பாதிப்பு கடலில் விழுந்த மழைத்துளியாகக் காணாமல் போகின்றது.

ஊரடங்கால் பொருளாதார முடக்கம் ஏற்படும் என்று கவலைப்படத் தெரிந்த மத்திய - மாநில அரசுகளுக்கு, பெண்களின் நிலை குறித்து யோசிக்க நேரமில்லை. பெண்கள் வீட்டு வேலைக்காகச் செலவிடுகிற உழைப்பையே உள்நாட்டு உற்பத்திக் கணக்கில் சேர்க்காதவர்கள், இதுபோன்ற இக்கட்டான காலத்தில் பெண்களைப் பற்றிச் சிந்தித்துவிடப் போகிறார்கள்?

இவ்வளவு நாட்களாகக் கணவரும் குழந்தைகளும் அலுவலகத்துக்கும் பள்ளிக்கும் சென்றுவிட, பெண்கள் தனித்திருக்கும் நேரம் அவர்களுக்கு ஆசுவாசமாக இருந்ததா எனத் தெரியாது. குறைந்தபட்சம் வன்முறையிலிருந்து அவர்களைச் சிறிது நேரம் விலக்கிவைத்திருந்தது. ஆனால், இப்போதோ கணவன் - மனைவி இருவருமே நாள் முழுவதும் வீட்டுக்குள்ளேயே முடங்கியிருப்பதால் இருவருக்குமே மனரீதியான தடுமாற்றங்கள் ஏற்பட்டாலும் பெண்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

அடியும் உதையும் மட்டுமே குடும்ப வன்முறை என்று இந்தக் காலத்திலும் சிலர் நினைத்துக்கொண்டிருப்பது வேதனை. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் வீட்டில் இருப்பதால் பெரும்பாலான வீடுகளில் மூன்று வேளையும் சமையல் செய்யப்படுகிறது. இடைவிடாத வீட்டு வேலைகள் பெண்களின் வேலைச் சுமையை அதிகரித்திருக்கின்றன. பல குடும்பங்களில் வருமானமே இல்லாத நிலையில் குடும்பத்தை நகர்த்த வேண்டிய பெரும் சுமையும் பெண்களின் தலையில்தான் விடிகிறது.

வீட்டு வேலைகளில் பங்கெடுக்காததன் மூலம் ஆண், தன் வீட்டுப் பெண் மீது வன்முறையைச் செலுத்துகிறான். வீட்டில் தன்னுடைய வேலைகளைச் செய்வதையும் குழந்தைப் பராமரிப்பில் ஈடுபடுவதையும்கூட

மனைவிக்குச் செய்யும் மிகப் பெரிய சேவையாகவே பெரும்பாலான ஆண்கள் நினைக்கிறார்கள். அவை தங்களின் வேலையும் கூடத்தான் என்பதை ஆண்கள் உணராதவரை, பெண்கள் மீது குடும்பப் பொறுப்பு, கடமை என்ற போர்வையில் செலுத்தப்படும் வன்முறைக்கு விடிவே இல்லை. அந்த வன்முறை இதுபோன்ற ஊரடங்கு நாட்களில் அதிகரித்திருப்பது குறித்துப் பலருக்கும் அக்கறையில்லை. அவையெல்லாம் பெண்கள் அனுபவிக்க வேண்டியவைதானே என்று வழக்கம் போல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே பொறுப்பு துறப்பு என்பதும் வன்முறையாகவே பார்க்கப்படுகிறது.

பொருளாதாரப் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியாததால் ஏற்படும் இயலாமையைப் பெரும்பாலான ஆண்கள் தங்கள் மனைவியிடம் கோபமாக வெளிப்படுத்துகிறார்கள். ஆணைச் சார்ந்திருக்கும் பெண்ணுக்கு அடங்கிப்போவதும் வன்முறைக்கு ஆளாவதுமான வழியைத் தவிர வேறு விடுதலையில்லை. எப்போதும் கணவனின் கண்காணிப்பிலேயே இருப்பதால் பெண்களால் உதவிக்கு யாரையும் கைபேசியில் அழைப்பதும் முடியாத காரியமாக இருக்கிறது.

இந்த ஊரடங்கின் மற்றொரு மோசமான விளைவு எதிர்பாராத அல்லது திட்டமிடாத கர்ப்பம். திருமண வல்லுறவும் இதில் அடக்கம். தன் விருப்பத்துக்கு இணங்காத மனைவியின் மீது ஆதிக்கம் செலுத்துவது, இங்கே ஆணுக்கான இலக்கணமாக வரையறுக்கப்படும்போது, அது சார்ந்த வன்முறையும் இயல்பானதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

பணப்புழக்கம் இல்லாததால் ஏற்படுகிற பொருளாதாரச் சுரண்டலும் வன்முறையும் இந்த ஊரடங்கு காலத்தில் அதிகரித்திருக்கிறது. நீதிமன்றம், காவல்நிலையம், சமூகநலத் துறை போன்றவை சார்பில் பரிந்துரைக்கப்படும் வழக்குகளைக் கையாண்ட பாதுகாப்பு அலுவலர்கள், ஊரடங்கையொட்டி குடும்ப வன்முறை வழக்குகளில் கவனம் செலுத்துகின்றனர்.

மது அருந்த முடியாத ஆத்திரத்தில் வன்முறையில் இறங்கிய 'குடிமகன்கள்', டாஸ்மாக் திறந்தபிறகு வேறுவிதமான பாதிப்புகளைத் தங்கள் குடும்பங்களுக்கு ஏற்படுத்தத் தொடங்கிவிட்டனர். குடிப்பதற்காக பணம் கேட்பது, வீட்டுச் செலவுக்கு வைத்திருக்கும் பணத்தில் குடிப்பது, குடித்துவிட்டு மனைவியையும் குழந்தைகளையும் அடிப்பது என்று வன்முறைக்குக் குறைவில்லாத வகையில் பார்த்துக்கொள்கின்றனர்.

மாவட்டம் தோறும் உள்ள ஒருங்கிணைந்த சேவை மையங்களும் குறுகிய காலத் தங்கும் இல்லங்களும் பெண்களின் துயர் நீக்கும் பணியில் இருந்தாலும், அது குறித்த விழிப்புணர்வு பரவலாக்கப்படவில்லை. மேல்தட்டு மக்கள் ஓரளவு நிலைமையைச் சமாளித்துவிடுகின்றனர். அடித்தட்டு மக்களுக்கோ வன்முறை குறித்தும் அதற்குப் புகார் அளிக்கலாம் என்பது குறித்தும் எதுவும் தெரிவதில்லை. டாஸ்மாக் திறக்கப்படுவதை மாபெரும் திருவிழாபோல் பட்டிதொட்டியெங்கும் சென்று சேரும் வகையில் அறிவிக்க முடிந்த அரசுக்கு, குடும்ப வன்முறையில் இருந்து விடுபட பெண்களுக்கு வழிகாட்டுவது இயலாத காரியமாக இருக்கிறது.

மதுபானக் கடைக்கு எந்தெந்த வயதினர் எப்போது செல்ல வேண்டும், அடையாள அட்டை அவசியமா என்பது குறித்தெல்லாம் ஊடகங்கள் வாயிலாகவும் ஒலிபெருக்கி மூலமும் அறிவிக்கத் தெரிந்தவர்களுக்கு, ஓட்டுவங்கியில் சரிபாதி எண்ணிக்கை கொண்ட பெண்களின் பாதுகாப்புக்கான ஏற்பாடுகளைப் பரவலாக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஏன் முடிவதில்லை?

●

கட்டுரை

# என்றென்றும் நினைக்கப் படுவார் வ.உ.சி.



- பெரணமல்லூர் சேகரன்

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட மகத்தான தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வ.உ.சி.

"லோகமான்ய பாலகங்காதர திலகர்தான் எனது அரசியல் குரு; 1893ல் எனக்கு 21 வயது ஆனதிலிருந்தே அவருடைய சொற்பொழிவுகளையும் எழுத்துக்களையும் கவனித்து வத்திருக்கிறேன். இந்தியா எனது நாடு, பிரிட்டிஷாரால் அடிமை கொள்ளப்பட்டுள்ளது. அவர்களது பிடியிலிருந்து இதை விடுவிக்க வேண்டும் என்பதை அவற்றிலிருந்து நான் கற்றுக் கொண்டேன்". இவ்வாறு வ.உ.சி குறிப்பிட்டதிலிருந்து அவரது சமூக அக்கறையை, தேசப் பற்றை அறியலாம்.

" அநீதியை வேரோடு கிள்ளி எறிவதற்காக கடவுள் நம்மிடையே பத்தாவது அவதாரம் எடுத்திருக்கிறார். இந்த முறை அவர் மனித உருவத்தில் இல்லை. அவரது அவதாரத்தின் பெயர் சுதேசி. அவரது ஆயுதம் புறக்கணிப்பு, அந்நியப் பொருள் எதையும் புறக்கணிப்பது; அவரது மந்திரம் 'வந்தே மாதரம்" என்றார் பாரதி. அத்தகைய சுதேசி இயக்கத்தால் கவர்ந்திழுக்கப்ப ட்டவர்தான் வ.உ.சி.

1906ல் தாதாபாய் நௌரோஜி தலைமையில் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. 'சுயராஜ்யம், புறக்கணிப்பு, தேசியக்கல்வி ஆகிய கொள்கைகள் அங்கு உருவாக்கப்பட்டன. எனினும் சுதேசி எனும் சொல்லுக்கான விளக்கத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதனால் காங்கிரசில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு குழுக்கள் உருவாகின.

சுதந்திரப் போராட்ட வீரர் பிபின் சந்திரபால் 1907 மே மாதத்தில் சென்னை வந்து போராட்டக்களத்தில் கைதானார். இந்தக் கைதைக் கண்டித்து மூன்று நோக்கங்களோடு வ.உ.சி பிரச்சார இயக்கத்தைத் தொடங்கினார். சுதேசி கப்பல் கழகம், பாலின் விடுதலை, தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர் போராட்டத்திற்கு ஆதரவு என்பவையே அம்மூன்று நோக்கங்கள். இந்தியா முழுவதும் 20 சுதேசி கப்பல் கழகங்கள் அமைக்கப்பட்டன. அவற்றின் மதிப்பு அக்காலத்திலேயே பத்து கோடி ரூபாயாக இருந்த போதிலும் பிரிட்டிஷ் கழகங்களின் கடும் போட்டிக்கு ஈடு கொடுக்க இயலவில்லை. பிரிட்டிஷார் வ.உ.சிக்களித்த இடையூறுகளுக்கு மத்தியில் எஸ்.எஸ்.கலீலியோ மற்றும் எஸ்.எஸ்.லாவோ என்ற இரு நீராவிக் கப்பல்கள் கடைசியாக தூத்துக்குடிக்கு வந்து சேர்ந்தன. பிரிட்டிஷாரின் குயுக்தி நடவடிக்கைகள் மூலம் வ.உ.சி.யை கழக நிர்வாகத்திலிருந்து வெளியேறச் செய்தனர். இறுதியாக வ.உ.சி. சிறைப்பட்டபோது, கழகத்தின் கப்பல்களை அதன் பங்குதாரர்கள் பிரிட்டிஷ் கம்பெனிக்கே விற்கச் செய்தனர். இது தொடர்பாக பாரதி "சிதம்பரம்! கௌரவம் முக்கியமானது! வெறும் சில சில்லறைக் காசுகளுக்காக இந்தப் பாவிகள் கப்பல்களை எதிரிகளுக்கு விற்றுவிட்டார்கள். இதைவிட அந்தக் கப்பல்களை அடித்து நொறுக்கி அதன் துண்டுகளை வங்கக் கடலில் வீசி எறிந்திருக்கலாம். இந்தச் சில்லறைக் காசுகளை இழப்பதனால் தமிழ்நாடு நாய்களிடம் போய்விடுமா? ஆண்மையற்றவர்கள்! ஆண்மையற்றவர்கள்!!" என சினத்துடன் பேசியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பிரிட்டிஷாருக்குச் சொந்தமான கோரல் பருத்தி

ஆலை கடுமையான ஒழுங்கு விதிகளால் நடத்தப்பட்டது. தொழிற்சாலை சட்டங்கள் அமுலாக்கப்படவில்லை. தொழிலாளர்கள் பன்னிரண்டு மணி நேரம் வரை வேலை வாங்கி உழைப்பு ஒட்டச் சுரண்டப்பட்டது. வார விடுமுறை, பண்டிகை விடுமுறை இல்லை. அற்பக் காரணங்களுக்காக தொழிலாளர்களுக்குப் பிரம்படி கொடுக்கப்பட்டதும் கசக்கும் உண்மை. இக்கொடுமைகளை எதிர்த்து வ.உ.சி தொழிலாளர்களைத் திரட்டினார். சுப்ரமணிய சிவாவும், வ.உ.சியும் பிரிட்டிஷ் கம்பெனியின் மோசமான நடவடிக்கைகளை பொதுக்கூட்டங்களில் அம்பலப்படுத்தினார்கள். வேலை நிறுத்தம் 1908 பிப்ரவரி 27 அன்று தொடங்கியது. அரசு சிறப்புப் படைகளை அனுப்பியது. வ.உ.சி, சுப்ரமணியசிவா ஆகியோரின் கூட்டங்களுக்குத் தடை விதித்தது. ஆனால் மக்கள் முழு ஆதரவளித்தனர். இறுதியில் தொழிலாளர்களின் மகத்தான போராட்டம் வெற்றி அடைந்து 50% ஊதிய உயர்வும் கிடைத்தது.

இதற்கிடையில் போராட்டத்தின் மூன்றாவது கட்டத்தில் வ.உ.சி. ஈடுபட்டார். பிபின் சந்திரபாலை விடுதலை செய்யுமாறு கோரி அவரது படத்துடன் தடையை மீறி ஊர்வலமாகச் சென்றார். இது பற்றி விளக்கம் அளிப்பதற்காக நேரில் வர வேண்டும் என்று கோரி வ.உ.சி, சிவா,பத்மநாப ஐயங்கார் ஆகியோர்க்கு கலெக்டர் விஞ்ச் சம்மன் அனுப்பினார். இறுதியாக வ.உ.சியும், சிவாவும் பிபின் சந்திர பாலை விடுதலை செய்யுமாறு கோரி ஒரு இயக்கத்தை உருவாக்கினார்கள்; அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்; கைது செய்யப்பட்டார்கள். ஒரு கேலிக் கூத்தான விசாரணை நடத்தப்பட்டது. இதைக் கேட்டதும் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் கிளர்ச்சிகள் வெடித்தன. கடுங் கோபமடைந்த மக்கள் அரசு அலுவலகங்களுக்குத் தீயிட்டுக் கொளுத்தினார்கள்; தந்திக் கம்பிகளை அறுத்தார்கள். இதைத் தொடர்ந்து நடந்த போலீஸ் துப்பாக்கிச்சூட்டில் நான்கு பேர் உயிர் துறந்தனர்.

முதல் அரசியல் வேலைநிறுத்தம்: தூத்துக்குடி ஆலைத் தொழிலாளர்கள் 1908 மார்ச் 14 அன்று வேலைநிறுத்தத்தைத் தொடங்கினார்கள். இது 19 ஆம் தேதி வரை நீடித்தது. அரசியல் கோரிக்கைகளுக்காக இந்தியத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வது என்பது இதுவே முதல் முறை. பம்பாயில் திலகர் கைது செய்யப்பட்டபோது, 1908 ஜூலை திலகருக்கு ஆதரவாக அரசியல் வேலைநிறுத்தம் நடைபெற்றது.

வ.உ.சியும் சுப்ரமணியசிவாவும் சென்னை உயர்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். எனினும் ராஜதுரோகம் மற்றும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறை வாசலிலேயே அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டார்கள். வ.உ.சிக்கு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் மிக நீண்டகால சிறைத்தண்டனை பெற்றவர் வ.உ.சி. "அந்த ராமனுக்கே 14 ஆண்டுகள்தானே.. உனக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனையா?" என அதிர்ச்சி அடைந்த வ. உ . சி.யின் சகோதரர் சித்தபிரம்மையில் புத்திசுவாதீனத்தால் பாதிக்கப்பட்டார்.

இந்திய நாட்டிற்காகத் தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த வ.உ.சி. தோன்றி 150 ஆண்டுகள் ஆன பின்பும் இன்று அவரது தியாகத்தை நினைவுகூர்கிறோம். தியாகத்திற்கும் அர்ப்பணிப்புக்கும் முன்மாதிரியாகத் திகழ்வதால் மனித குலம் உள்ளளவும் என்றென்றும் வ.உ.சி நினைக்கப்படுவார் எனின் மிகையன்று.

இந்திய நாட்டை ஆள்வோருக்கும் இந்தியச் சுதந்திரத்திற்கும் எள்ளளவும் தொடர்பில்லாத இக்கால கட்டத்தில் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் அளப்பரிய தியாகங்களை நினைவு கூர்ந்து இளைய தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டியது அவசியம். செக்கிழுத்த செம்மல் வ. உ.சி.யின் உறுதியான சுதேசி இயக்கத்தைத் திரும்பிப் பார்த்து இன்றைய விதேசிக்கொள்கையைப் பின்பற்றும் கார்ப்பரேட் ஆட்சியாளர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து வலுவான இயக்கத்தைக் கட்டுவதே ஒப்பற்ற தியாகி வ. உ.சிக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

●



கவிதை

# நூற்றாண்டு கண்ட யுகப்புரட்சி

- பெரணமல்லூர் சேகரன்

இம்மென்றால் சிறைவாசம் உம்மென்றால் சிரச்சேதம்
கம்மென்றால் முடியாட்சி ரஷ்யாவின் தொடர் சரிதம்
ஏனென்ற வினாவுடன் தீர்வுதரும் கணிதம்
தேனெனத் தோன்றியதே மார்க்சியப் புனிதம்

ஏட்டில் கற்றதை ஏற்றமிகு மதியால்
நாட்டில் கற்பித்து நாடாள்வோர் சதியை
போரில் சிதைத்து முடியாட்சியில் விதியை
நேரில் தகர்த்து நல்லாட்சி விதைக்கும்

வாழ்வை ஈந்தார் லெனினெனும் தலைவர்
ஏழ்மை ஒழிக்க உழைத்த தீரர்
உழைக்கும் வர்க்க மாந்தரின் தோழர்
உவக்கும் பொதுமை சமைத்த புனிதர்

கொடுமை சிறைவாசம் புரட்சி வித்தூன்ற
கடுமை ஜாரரசின் முடிவுக்கு வழிதோன்ற
வெறுமை நாடு கடத்தல் உரமாக
திறமை வேடமிட்டு செய்திகள் பரிமாறி

பன்முகம் காட்டிய லெனினின் தலைமை
நன்முகம் ஆனது வர்க்க வலிமை
தீயமுகம் தீய்ந்தது புரட்சியில் பழமை
ஆளும்முகம் ஆனது எளியோரின் புதுமை

தியாகம் தோய்ந்த செங்கொடி அரசு
வர்க்கம் உழைப்போர் உரிமைகள் முரசு
சொர்க்கம் ஆனது சோவியத் அரசு
தீர்க்கம் தலைமுறை வாழ்ந்தது பெருசு

நூற்றாண்டு கண்ட யுகப்புரட்சி திலகம்
பாராண்டது மூன்றில் ஒருபங்கு உலகம்
யாராண்ட போதிலும் காணா வளமை
சிவப்பாண்ட போதில் கண்ட செழுமை

நிழலின் அருமை வெயிலில் தெரியுது
தழலின் கொடுமை தணிக்கத் தேடுது
உழலும் ஏழ்மை ஒழிக்கும் வழியது
சுழலும் உலகில் மார்க்சியம் மேவுது

ஆதிக்க அமெரிக்கக் கழுகின் பார்வையில்
சோதிக்க சோஷலிச பின்னடைவு வீழ்ச்சியில்
ஆதிக்க ஆளின்றி வளரும் நாடுகள்
தீதுயர அல்லலுறும் உலக நாடுகள்

மனிதம் காக்கும் மார்க்சியக் கலகம்
புனிதம் கற்று பற்றல் திலகம்
கணிதம் எல்லாமும் எல்லார்க்கும் கிடைக்கும்
சரிதம் சொல்லும் மண்ணில் சொர்க்கம்



# மனமிருந்தால் மார்க்கபந்து!

- ஜிஜி

இந்த உலகில் முக்கால்வாசிப் பேர் பணத்தைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் தாங்கள் தங்கள் வாழ்வில் மிகப்பெரிய நிலையை குறுகிய காலத்தில் அடைந்துவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். எத்தனை குறுக்கு வழி இருந்தாலும் அதில் சென்று இலக்கை அடைந்து விட வேண்டும் என்று அலைபாய்கிறார்கள். எந்த மதத்துக் காரர்களானாலும் அவர்கள் கடவுளிடம் வேண்டுவது எல்லாம் தங்களுடைய கஷ்டங்கள் நீங்கி விட வேண்டும். செல்வம் கொழிக்க வேண்டும். நிலபுலன்கள் வாங்க வேண்டும். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடன் இருக்க வேண்டும் என்பதுதான். நேர்மையான முறையில் முன்னேற மனமில்லாமல் கடவுளின் முன் இத்தகைய நபர்கள் வேண்டுவதைப் பார்த்து கடவுள் என்ன செய்வார் பாவம்? கடவுளுக்கே கையூட்டு கொடுக்க தயாராக இருக்கிறார்கள் இத்தகையோர். நான் அந்த பில்டிங்கை வாங்கிட்டா உன் உண்டியலில் ரூ.5 லட்சம் போடுறேன். இந்த டீல் ஓகே ஆயிட்டா உனக்கு நான் முடிகாணிக்கை செய்யறேன், தங்கத் தேர் இழுக்கிறேன் என்றெல்லாம் கடவுளை கமிஷன்காரராக பார்க்கும் பக்தகேடிகள் எத்தனை பேர். நேர்மையாக உழைக்காமலேயே சிலபேர் பெரும்பணக்காரர்கள் ஆகிவிட்ட உதாரணம் தான் இவர்களெல்லாம் இப்படி நினைப்பதற்குக் காரணம். இன்றிருக்கும் பல முதலாளிகள், பணக்காரர்கள் 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தார்கள் என்ற புள்ளிவிவரங்களை அறிந்த பின்னர் இவர்களுக்கும் அத்தகைய ஆசை தொற்றிக் கொள்கிறது. 'நேர்மையாக உழைத்தால் உடனடியாக பெரும்பணக்காரராக ஆக முடியாது' என்கிற எண்ணத்தை வளர்த்தெடுக்கிறது. அதனால், யாரைப் பார்க்க வேண்டும்? அவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படி தான் விரும்பியதைப் பெற வேண்டும் என்கிற மாய வலைக்குள் விழ்ந்துவிடுகிறார்கள். இதுபோன்ற நபர்களில் பலபேர் சட்டத்தின் பிடியிலும், பிடிவாதத்தின் கரத்திலும் அகப்பட்டுக் கொள்கிறார்கள். நீந்திக் கரை சேர்ந்த நூற்றில் ஓரிருவர் பொதுவெளியில் தவறான கற்பிதங்களாக மாறிவிடுகிறார்கள். பலபேர் குறுக்கு வழியில் சென்று பெரும் செல்வந்தர்களாக முயற்சிப்பதற்கு தவறான முன்னுதாரணங்களாக இவர்கள் ஆகி விடுகிறார்கள்.

'வசூல்ராஜா எம்பிபிஸ்' திரைப்படத்தில் நடிகர் கமல்ஹாசன் அடிதடி செய்து பணம் வசூலிக்கிற வசூல்ராஜாவாக இருப்பார். அவர் தன் பெற்றோர் பார்த்த பெண்ணை அடைவதற்காக டாக்டருக்கு படிப்பார். அவர் எம்பிபிஎஸ் நுழைவுத் தேர்வு எழுதி தேர்வு பெறவேண்டிய கட்டாயம் வரும்போது, தன் மாமனார் நடத்தும் மருத்துவக்கல்லுhரியில் இருக்கும் மார்க்கபந்து என்பவரை உபயோகப்படுத்தி தேர்வில் வெற்றிபெற்றுவிடுவார். கல்லூரி நடத்தும் அவருடைய மாமனாருக்கு இந்த வசூல்ராஜா எப்படி அதிகமார்க்குகள் வாங்கினார் என்ற பெருஞ்சந்தேகம் எழும். அவர் நேரடியாகவே வசூல்ராஜாவிடம் ''நீ இதை எப்படி பாஸ் பண்ணே?'' என்று ஒரு சீனில் கேட்பார். அதற்கு கமல் ''மனமிருந்தால் மார்க்கபந்து.'' என்று முதலில் சொல்லிவிட்டு, உடனடியாக அதை மாற்றி ''மனமிருந்தால் மார்க்கமுண்டு'' என்று சொல்வார். இன்று நிறைய பேர் மனமிருந்தால் மார்க்கமுண்டு என்று நேர்மையாக போராடி வெல்ல மனமில்லாமல் ''மனமிருந்தால் மார்க்கபந்து.'' பார்முலாவில் பயணிக்கிறார்கள். அதற்காக அவர்கள் எதையும் செய்யத் துணிகிறார்கள். இதனால் நேர்மையாளர்கள் ஏமாளிகளாகவும், இளிச்சவாயர்களாகவும் காட்சிப்படுத்தப்படுகிறார்கள்.

குறுக்கு வழியில் பணக்காரரான ஒருவரைப் பார்த்த ஒரு இளைஞருக்கு தானும் பெரிய பணக்காரராக ஆகி விட வேண்டும் என்ற ஆசை

வந்துவிட்டது. ஆனால் அவனிடம் பணமோ, செல்வாக்கோ கிடையாது. ஆனாலும் மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பதில் தீர்க்கமாக இருந்த அந்த இளைஞன் தன்னுடைய ஊருக்கு வந்திருந்த ஒரு ஞானியைப் பற்றி கேள்விப்பட்டான். அந்த ஞானியிடம் அதீத சக்தி இருப்பதாகவும் அவர் சொன்னது நடப்பதாகவும், அவரை பார்த்தால் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து விடும் என்று அந்த ஊரில் பலபேர் அவர் தங்கியிருக்கும் மலைப்பகுதிக்குச் சென்றிருப்பதாகவும் தெரியவர அந்த இளைஞனுக்கு உற்சாகமாகிவிட்டது. நேரே அவர் இருக்கும் குடிலுக்குப் போனான். அவர் காலில் விழுந்து அவனை அவருடைய சீடனாக ஏற்றுக்கொள்ளச்சொல்லி கேட்டான். அவரும் சரி இருந்துக்கோ என்று பேசாமல் போய்விட்டார். அதன்பிறகு ஒரு வார காலத்திற்கு அவருடைய செய்கைகளை அவன் நோட்டமிட்டான். ஆனால் அவரிடமிருந்து எந்த ரகசியத்தையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

அவன் வந்த நோக்கத்தைப் புரிந்து கொண்ட ஞானி ''நீ உன் நேரத்தை வீணடிக்கிறாய். என்னிடம் எதுவுமே கிடையாது. நான் ஒரு பழைய ஆத்மா. என்னைத் தேடி மக்கள் வருகிறார்கள். நான் அவர்களிடம் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன் அவ்வளவுதான்'' என்றார். ஆனால் அந்த இளைஞனோ, ''என்னை இப்படியெல்லாம் சமாதானப்படுத்த முடியாது. நீங்கள் அத்தனை மர்மங்களையும் திறக்கும் ரகசியத்தை எனக்கு சொல்லியே ஆக வேணடும்.'' என்றான்.

சில வாரங்கள் கழிந்தன. ஞானியால் அவனுடைய தொந்தரவை பொறுக்கவே இயலவில்லை. அவனுக்கும் சேர்ந்து உணவு தேட வேண்டியிருந்தது. குளிருக்கு போர்வையும் படுக்க பாயும் ஏற்பாடு செய்து தர வேண்டியிருந்தது. இவற்றையெல்லாம்விட ஞானி மற்றவர்களுக்கு அருளாசி வழங்கும் போது அருகிலேயே நின்று அவர் என்ன என்ன செய்கிறார் என்று உற்று நோக்கிக் கொண்டிருந்ததோடு. அந்த பெண்மணிக்கு ஏன் அப்படி சொன்னீர்கள்? வேறொரு கிழவருக்கு ஏன் மாற்றிச் சொன்னீர்கள் என்றெல்லாம் குடைந்தெடுக்க ஆரம்பித்தான். அவனுடைய தொந்தரவை தாங்க முடியாத அந்த ஞானி அடுத்தநாள் அந்த சீடனைக் கூப்பிட்டு இன்று நான் உனக்கு அந்த ரகசியத்தைக் கூறப் போகிறேன் அது ஒன்றும் பெரிய மந்திரம் அல்ல மிகவும் எளிமையானது.'' என்றார். 'ஓம் மணி பத்மே ஹம்' என்றார். திபெத் நாட்டில் சொல்லப்படும் இந்த மந்திரம் பொதுவாக கடவுளை வழிபடும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். இந்த மந்திரத்தைச் சொன்னதும் சீடன் சிரிக்க ஆரம்பித்தான். ''குருவே என்னை ஏமாற்ற வேண்டாம். இந்த மந்திரம் எல்லோருக்கும் தெரிந்த மந்திரம் தானே.'' என்றான்.

ஞானியும் புன்னகை செய்தபடி ''நீ சொல்வது போல் இது எல்லோருக்கும் தெரிந்த மந்திரம்தான் ஆனால் இந்த மந்திரத்தை திறக்கும் சாவி தெரியுமா உனக்கு? அது என்னிடம் உள்ளது.'' என்றார். ஒரு மந்திரத்தை திறப்பதற்கு சாவி வேண்டுமா? என்று அந்த சீடன் வியந்து போனான்.

''ஆமாம் அதுதான் ரகசியம். ஐந்து நிமிடத்திற்கு இந்த மந்திரத்தை திரும்பத் திரும்ப உச்சரித்து முடிக்கும் வரை உனது மனதில் குரங்கு வரக்கூடாது.'' என்றார் ஞானி.

''குருவே, எனது மொத்த வாழ்க்கையிலும் நான் குரங்கைப் பற்றி நினைத்ததே இல்லை. அப்படியிருக்க, ஒரு மந்திரத்தைச் சொல்லும்போது ஏன் நான் குரங்கைப் பற்றி நினைக்க வேண்டும்?'' என்று சொல்லிக்கொண்டே குடிலை விட்டு வெளியே நடையைக் கட்டினான். மலையிலிருந்து கீழே இறங்கி வரும்போதே மந்திரத்தை மனதிற்குள் சொல்ல ஆரம்பித்தான். அப்படி சொல்ல ஆரம்பித்ததும் அவன் நினைவுத் திரையில் குரங்குகள் தோன்றி பல்லிளிக்க ஆரம்பித்தன. அவன் கண்களை மூடினான் குரங்குகள் அவன் கனவில் வந்தன. அவன் ஓடினான். குரங்குகள் அவனைப் பின் தொடர்ந்தன. அவன் போய் அமர்ந்த இடத்திலெல்லாம் குரங்குகள் சுற்றி அமர்ந்து கொண்ட மாதிரி இருந்தது.

பனி சில்லிடும் ஆற்றில் குளித்துவிட்டு தியானத்தில் அமர்ந்தால் குரங்குகள் போய்விடும் என்று நம்பினான். தனது பூஜை அறையில் நறுமண பத்திகளை ஏற்றி வைத்துவிட்டு பத்மாசனத்தில் அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினான். எல்லா திசைகளிலிருந்தும் குரங்குகள் அவனை பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. குரங்குகள் இல்லாமல் ஒரு

மந்திரத்தைக் கூட அவனால் உச்சரிக்க முடியவில்லை. அடுத்தநாள் காலையில் தனது குருவிடம் சென்று தனக்கு கொடுக்கப்பட்ட சாவியை எடுத்துவிடுங்கள் என்று கதறியபடி கூறினான். அதற்கு ஞானி அதனால்தான் நான் அந்த மந்திரத்தை யாரிடமும் சொல்வதில்லை. நான் ஏன் மௌனமாக இருக்கிறேன் என்று இப்போதாவது உனக்குப் புரிகிறதா?'' என்றார்.

''போங்க ஞானி. நீங்களும் உங்க மந்திரமும். உங்களிடம் ஒரு வார்த்தை பேசக்கூட எனக்கு விருப்பம் இல்லை. முதலில் எனக்கு கொடுக்கப்பட்ட சாவியைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த குரங்குகளின் தொல்லை என்னால் தாங்கமுடியவில்லை'' என்றான் சீடன்.

அதற்கு அந்த ஞானி, ''நீ அந்த சாவி்யை திரும்ப கொடுத்துவிட்டால் அந்த மந்திரத்தை திரும்பச் சொல்லக்கூடாது. திரும்பச் சொன்னால் குரங்குகள் திரும்ப வரும். அப்புறம் அவை உன்னைவிட்டு போகவே போகாது. அதன்பிறகு உன் இஷ்டம்.'' என்றார்.

''அய்யோ சாமி ஆளை விடு மந்திரமும் வேண்டாம். குரங்குகளும் வேண்டாம்.'' என்று மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தான். அதன்பிறகு அவன் அந்த மந்திரத்தைச் சொல்லவேயில்லை. கண்களை மூடினான் குரங்குகள் எதுவும் வரவில்லை. கண்களைத் திறந்து பார்த்தான் குரங்குகள் எங்கேயும் இல்லை. ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது. என்ன இது விநோதம். நான்கு வார்த்தைகள் நம்மை ஒரு வழி செய்து விட்டனவே என்று எண்ணினான். அதன்பிறகு ஒருமாத காலம் அந்த மந்திரத்தை அவன் சொல்லவே இல்லை. ஒரு மாதம் கழித்து ஊரில் புதிதாக ஒரு பணக்காரர் இடம் வாங்கி கார் பங்களா வசதிகளுடன் வீடு கட்டுகிறார் என்ற செய்தி அவன் வரைக்கும் பரவியது. அந்த இளைஞனுக்கு இப்போது கொஞ்சம் ஆத்திரமாக இருந்தது. ஆத்திரத்திற்கு காரணம் கண்டவனெல்லாம் பணக்காரனாகிறான். ஆனால் நம்மால் முடியவில்லையே என்பதுதான். அதனால் அவனுக்கு திரும்பவும் அந்த மந்திரத்தை சொன்னால் என்று தோன்றியது. கண்களை மூடி 'ஓம் மணி பத்மே ஹம்' என்றான். இப்போது குரங்குகள் அனைத்து திசைகளிலிருந்தும் வரத் தொடங்கின.

இந்த திபெத்தியக் கதை நமக்கு சொல்ல வருவதென்ன. முயற்சி செய்யும் மனம் வேண்டும் அதை நேர்மையாக முயற்சி செய்ய வேண்டும். மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பதற்கு அர்த்தம் நல்ல மனமிருந்தால் நல்ல மார்க்கமும் கெட்ட மனமிருந்தால் கெட்ட மார்க்கமும் உண்டு என்பதைத்தான். மனம் அது செம்மையானால் மந்திரங்கள் செபிக்க வேண்டாம் என்கிறது திருமந்திரப்பாடல். அதாவது மனதை சமமாக வைத்துக் கொண்டால் தெய்வங்களை வேண்டி மந்திரங்கள் எதுவும் சொல்லி வழிபட வேண்டாம் என்கிறது அது. திடீர் பணக்காரனாகிவிட்ட நபரை பற்றி மற்றவர்கள் பேசுவது இருக்கட்டும். அவர் மனதில் என்ன இருக்கிறது என்று நமக்கு யாருக்காவது தெரியுமா? தவறான வழியில் பணம் சேர்ந்துவிட்டதற்காக அவர் மனசாட்சியே அவரை கொல்வது நமக்கு தெரிய நியாயமில்லை. உங்கள் ஊரில் திடீர் பணக்காரர் ஆனவர்கள் எப்படி பணக்காரர்கள் ஆனார்கள் என்று கேட்காதீர்கள். அவர்களின் கடைசி காலம் எப்படி இருந்தது என்று மட்டும் கேட்டுப்பாருங்கள்.

அரசு ஊழியர்களாகிய நாம் சுமார் 34 ஆண்டுகளாக உரிமைகளுக்காக போராடுகிறோம். சில உரிமைகளைக்கூட இழந்திருக்கிறோம். வழக்குகள் போடப்படுகின்றன. நீதிமன்றங்கள் கேள்விகள் கேட்கின்றன. எல்லாவற்றிற்கும் பதில் சொல்கிறோம். குறுக்கு வழியில் சலுகைககளைப்பெற நாம் முயற்சித்ததாக வரலாறில்லை. குறுக்கு வழியில் சலுகைகளைப் பெற முடியுமா என்று கேட்காதீர்கள்? அப்படிப் போனவர்கள் சுயநலவாதிகளாகவும் அரசின் அடிமைகளாகவும் ஆகிவிட்ட நிகழ்வுகள் இங்குண்டு. நாம் எந்த அரசாங்கம் வந்தாலும் தலை நிமிர்ந்து நின்று உரிமைகளைக் கேட்கிறோம். மனமிருக்கிறது மார்க்கத்தை அடையலாம் என்ற தீர்மானத்தோடுதான் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்கிறோம். 'மனம் இருந்தால் மார்க்கபந்து' என்பவர்கள் அதிர்ஷ்டத்தை நம்புபவர்கள் அதுவும் குருட்டு அதிர்ஷ்டத்தை நம்புபவர்கள். நமக்கு மார்க்கபந்து தேவையில்லை நம்மை வழிநடத்தும் தலைமைக்கு நம்மை நல்வழியில் கொண்டு சேர்க்கும் மார்க்கமுண்டு. அது போதும்!

●

சுருக்கம்

பொதுப்பணிகள் - மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழான அறிவிப்பு - 2016, 2017 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரசுப் பணியாளர்களின் வேலை நிறுத்தப் போராட்ட காலங்கள் மற்றும் தற்காலிகப் பணிநீக்கக் காலம் - பணிக்காலமாக முறைப்படுத்துதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**மனித வள மேலாண்மைத் (கே) துறை**

அரசாணை (நிலை ) எண். 113

13.10.2021
பிலவ, புரட்டாசி-27,
திருவள்ளுவர் ஆண்டு 2052.
படிக்க :

1. அரசுக் கடித எண் 23689/கே.1/2017-1 மற்றும் 2, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 17.08.2017 மற்றும் 07.09.2017.
2. அரசுக் கடித எண்.23689/கே.1/2017-6, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 27.09.2017.
3. அரசுக் கடித எண்.38148/கே.1/2018-11 மற்றும் 13, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 18.01.2019 மற்றும் 24.01.2019.
4. அரசாணை (நிலை) எண்.9, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 02.02.2021.

******

ஆணை :

கடந்த 2016, 2017 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில், சில அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர் சங்கங்களை சேர்ந்த பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர். அவ்வேலை நிறுத்தப் போராட்ட காலங்களுக்கு, 'பணிபுரியவில்லை என்றால் ஊதியமில்லை" என்ற கொள்கையின் அடிப்படையில் அவர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கப்படவில்லை. மேலும், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளும், குற்றவியல் வழக்குகளும் தொடரப்பட்டன.

2. 2019-ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகளை மட்டும் கைவிட மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. இந்நிலையில், மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டக் காலங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தற்காலிகப் பணிநீக்கக் காலம் ஆகியவற்றை பணிக்காலமாக முறைப்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை பணியாளர் சங்கங்கள் அரசுக்கு முன்வைத்து வந்தன.

4. அதனைத் தொடர்ந்து, 07.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவை கூட்டத்தில், சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன் :

- 2016, 2017 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் முந்தைய அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டங்கள் தொடர்பாக, பல்வேறு சங்கங்கள் தங்கள் வேலை நிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணிநீக்கக் காலத்தினைப் பணிக்காலமாக முறைப்படுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதனைப் பரிவுடன் பரிசீலித்து, பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுடைய வேலை நிறுத்தக் காலம் மற்றும் தற்காலிகப் பணிநீக்கக் காலம் ஆகியவை பணிக் காலமாக முறைப்படுத்தப்படும்.
- வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும் வகையில், கலந்தாய்வின் போது அவர்களுக்கான உரிய முன்னுரிமை வழங்கப்படும். மேலும், போராட்டக் காலத்தில் அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் கைவிடப்படும். அந்த ஒழுங்கு நடவடிக்கையின் காரணமாக பதவி உயர்வு ஏதேனும் பாதிக்கப்பட்டிருந்தால், அவையும் சரி செய்யப்படும்.

5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:

i) 2016, 2017 மற்றும் 2019-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேலை நிறுத்தப் போராட்ட காலங்கள் (10.022016 முதல் 19.022016 வரை, 22082017 (ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் ), 07.09.2017 முதல் 15.09.2017 வரை மற்றும் 22.01.2019 முதல் 30.01.2019 வரை) பணிக்காலங்களாக முறைப்படுத்தப்படுகின்றன;

(ii) மேற்குறிப்பிட்ட வேலை நிறுத்தப் போராட்டங்களுடன் தொடர்புடைய தற்காலிகப் பணி நீக்கக் காலமும், பணிக் காலமாக முறைப்படுத்தப்படுகிறது:

(iii) அவ்வேலை நிறுத்தப் போராட்டங்களின் காரணமாக அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் குற்றவியல் வழக்குகள் அனைத்தும் கைவிடப்படுகின்றன;

(iv) அவ்வொழுங்கு நடவடிக்கைகளின் காரணமாக, பதவி உயர்வு பெறுவதில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அதனை சரிசெய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்;

(v) வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பணியிட மாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களை, அதே இடத்தில் மீண்டும் பணியமர்த்தும் வகையில், பணியிட மாற்றத்திற்கான கலந்தாய்வின் போது அவர்களுக்கான உரிய முன்னுரிமையினை வழங்க, பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(vi) மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தின்படி, 07.09.2017 முதல் 15.09.2017 வரையிலான வேலை நிறுத்த நாட்களை ஈடுசெய்யும் வகையில் சனிக்கிழமை, விடுமுறை நாட்களில் பணிபுரிந்து ஊதியம் பெற்ற பணியாளர்களுக்கு, இவ்வேலை நிறுத்தக் காலத்தினை தற்போது பணிக்காலமாக முறைப்படுத்துவதன் காரணமாக மீண்டும் ஊதியம் பெற்று வழங்கும் நிலை எழாது;

(vii) வேலை நிறுத்தப் போராட்டக் காலத்தினை மேற்குறிப்பிட்டவாறு பணிக்காலமாக முறைப்படுத்தும் போது, வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே சம்பந்தப்பட்ட பணியாளர் தகவலின்றி பணிக்கு வராமல் இருந்துள்ளார் என்பதையும், வேலை நிறுத்தப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன், அவர் உடனடியாக பணிக்கு திரும்பி உள்ளார் என்பதையும் சம்பந்தப்பட்ட விடுப்பு முறைப்படுத்தும் அலுவலர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

வெ.இறையன்பு

அரசு த லைமைச் செயலாளர்

# மாவட்ட மாநாடுகள்

**வடசென்னை**

வடசென்னை மாவட்ட 13ஆம் மாவட்ட மாநாடு 09.10.2021 (சனிக்கிழமை) அன்று திருமங்கலம், சமுதாயநல கூடத்தில் தோழர் இமானுவேல் நினைவரங்கத்தில் நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் ப. சுந்தரம்பாள் அவர்கள் தலைமை உரையாற்றினார். மாவட்ட இணைசெயலாளர் கெ. மகேந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணை தலைவர் பி. பத்மநாபன் வரவேற்புரையாற்றினார். மாநிலத்தலைவர் மு. அன்பரசு மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் ம.அந்தோணிசாமி, வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் த. ஏழுமலை, வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர்.

சிஐடியு மத்திய சென்னை மாவட்ட இணைச்செயலாளர் தோழர் வி. தயானந்தன், ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் கு. வெங்கடேசன், முன்னாள் மாநில துணைத்தலைவர் பி.எஸ். அப்பர், மற்றும் வெற்றிராஜன் மாநாட்டினை வாழ்த்தி பேசினார்கள். மாநில செயலாளர் இரா.ந. நம்பிராஜன் வாழ்த்துரை வழங்கினார்.

மகளிர் அமர்வு: ப.சுந்தரம்பாள் அறிக்கையினை சமர்ப்பித்தார். மகளிர் அமர்வினை வாழ்த்தி அருணா, TNPGTA மகளிர் செயலாளர் வாழ்த்தி பேசினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: ப. சுந்தரம்மாள், செயலாளர்: ம. அந்தோணிசாமி, பொருளாளர் - த. ஏழுமலை. துணைத்தலைவர்கள்: த.குணசேகரன், கு. சாதிக் பாஷா, எம்.வேலு, எம்.விவேகானந்தன். இணைச்செயலாளர்கள்: ஜெ.சரஸ்வதி, வி. விஜயகுமரன். கெ.மகேந்திரன், வைவ சிவக்குமார். தணிக்கையாளர்கள் : சு.சித்ரா, புரூஸ்லீ. ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலச் செயலாளர் தெ. வாசுகி நிறைவுரையாற்றினார்கள்.

மாவட்ட துணைத்தலைவர் எஸ். பார்த்திபன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.

இம்மாநாட்டில் 35 பெண்கள் உட்பட 125 பேர் கலந்துக் கொண்டனர்.

**தென்சென்னை**

தென்சென்னை மாவட்ட மாநாடு 09.10.2021 (வெள்ளிக்கிழமை) 11.00 மணிக்கு நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் சா. டேனியல் ஜெயசிங் தலைமைத்தாங்கினார். சி.கலைச்செல்வி அஞ்சலி தீர்மானம் முன்மொழிந்தார்கள், மா.செந்தில்குமார் வரவேற்புரை நல்கினார், மாநிலச் செயலாளர் இரா.ந. நம்பிராஜன் துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் நா. வினோத்குமார் வேலை அறிக்கையும், பொருளாளர் உ.சுமதி வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். மாநிலச்செயலாளர் தெ. வாசுகி வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர் - சா. டேனியல் ஜெயசிங், செயலாளர் - நா. வினோத்குமார், பொருளாளர்: உ.சுமதி, துணைத்தலைவர்கள்: ப.புகழேந்தி, சி.கலைச்செல்வி, பெ.ஜெயராமன், க,அருட்செல்வன், இணைச்செயலாளர்கள் : கீ.ரகுராமன், மா.செந்தில்குமார், இ. ரேணுகாதேவி, கே. பாலாஜி பிரசாத், தணிக்கையாளர்கள்: வே. ராஜாராமன், என் ரமேஷ், ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநில தலைவர் மு.அன்பரசு, நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைசெயலாளர் இ.ரேணுகாதேவி நன்றியுரையாற்றினார்.

**விருதுநகர்**

விருதுநகர் மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 23.10.2021 (சனிக்கிழமை) அன்று அருணாச்சலம் வள்ளியம்மாள் திருமண மஹாலில் நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் த. பால்முருகன் தலைமை வகித்தார். மாவட்ட இணைச்செயலாளர் கு. ராஜகுழு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்புக்குழு தலைவர் எம். திருமூர்த்தி வரவேற்புரையாற்றினார்.

பொதுச்செயலாளர் ஆ. செல்வம் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கா.கருப்பையா, வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் சி. முத்துவெள்ளையப்பன், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். சிஐடியு மாவட்டசெயலாளர், பி.என். தேவா, அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட இணை செயலாளர் பி. பாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநாட்டில் 20 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகளிர் கருத்தரங்கம்: யு.மாரியம்மாள் தலைமை தாங்கினார். எம்.மகாலட்சுமி, உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு சிறப்புரையாற்றினார்கள்

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்: த.பால்முருகன், பேரூராட்சி செயலாளர்: கா.கருப்பையா, நெடுஞ்சாலைத்துறை பொருளாளர்: சி. முத்துவெள்ளையப்பன். துணைத்தலைவர்கள்: ஜி. ராஜகுரு, பொது நுhலகத்துறை, பி, தமிழ்ச்செல்வி, (சத்துணவு) சமூக நலத்துறை, என். இளங்கோ, நகராட்சி, இரா. முகுந்தன், வருவாய்த்துறை. இணைச்செயலாளர்கள்: ஆர். குருசாமி, பட்டுவளர்ச்சித்துறை, என். முருகானந்தம், சமூகநலத்துறை, எஸ்.சுந்தரராஜ், நீதித்துறை, ஜேசுடெல்குயின், MRB செவிலியர். தணிக்கையாளர்கள்: ஜி. முனிராஜ், எம். முனிராஜ்.

ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநில துணைத்தலைவர் இரா. மங்களப்பாண்டியன், நிறைவுரையாற்றினார்.

**தேனி**

தேனி மாவட்ட மாநாடு 23.10.2021 (சனிக்கிழமை) அன்று TNPTF கூட்ட அரங்கில் மாவட்ட தலைவர் கு,வரதராஜ் தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட இணைச்செயலாளர் ரா.முத்தையா வரவேற்புரையாற்றினார்.

மாநிலத்தலைவர் மு. அன்பரசு மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் த, இராமகிருஷ்ணன், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் பே. பேயத்தேவன், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட வேண்டும், காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் அவுட் சோர்சிங் முறைகளை கைவிட வேண்டும், முடக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் சரண்விடுப்பு வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட 15-ற்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சிஐடியு மாவட்டத்தலைவர் சி,முருகன், அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் பி.ராமமூர்த்தி, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் மாவட்ட செயலாளர் கே. துரைராஜ், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி, மாவட்டத்தலைவர் எம். சீனிவாசன், ஜாக்டோ-ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பொ. அன்பழகன் மற்றும் தோழமை துறைசங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: பே. பேயத்தேவன், செயலாளர்: ச.தாஜுதீன் உள்ளாட்சி, நிதித்தணிக்கை த்துறை, பொருளாளர்: முத்துக்குமார், நெடுஞ்சாலைத்துறை, துணைத்தலைவர்கள்: த.இராமகிருட்டிணன், கூட்டுறவுத்துறை, இரா. முத்தைய்யா, நெடுஞ்சாலைத்துறை, வெ. நாகராஜ், வருவாய்த்துறை, பா.சி.தமிழ்பரமன், மருத்துவத்துறை, இணைச்செயலாளர்கள்: பொ.அழகர்ராஜா, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சு.ஜானகி, சமூகநலத்துறை, அன்னலட்சுமி, ஊரகவளர்ச்சித்துறை, அ. முத்துராணி, மருத்துவத்துறை, தணிக்கையாளர்கள்: இரா. விஸ்வன், கூட்டுறவுத்துறை, மா.க. முரளி, சுகாதாரத்துறை,

பொதுச்செயலாளர் ஆ.செல்வம் நிறைவு பேருரையாற்றினார்

மாநில செயற்குழு உறுப்பினர் சு, இரவிக்குமார் நன்றி கூற செயற்குழு நிறைவுற்றது.

**5தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்ட மாநாடு 23.10.2021 (சனிக்கிழமை) அன்று நடைப்பெற்றது

மாவட்ட தலைவர் து. செந்துh்ர் ராஜன் தலைமை வகித்தார்.மாவட்ட துணைத்தலைவர் அண்ணாமலை பரமசிவன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலார் அ. சாம் டேனியல் ராஜ் வரவேற்புரையாற்றினார். என். வெங்கடேசன், மாநில துணைத்தலைவர் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் தே. முருகன், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் மு. தமிழரசன், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். TNPTF மாவட்ட செயலாளர் சு.செல்வராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். மாவாட்ட நிர்வாகிகளால் மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகளிர் மாநாடு : ஆ. மகேஸ்வரி மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தலைமை தாங்கினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் கோ. பழனியம்மாள் சிறப்புரையாற்றினார்

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்-து.செந்துh்ர் ராஜன், வருவாய்த்துறை, செயலாளர் - தே. முருகன், வணிகவரித்துறை, பொருளாளர்: மு. தமிழரசன், சத்துணவுத்துறை, துணைத்தலைவர்கள்: சோ. மகேந்திர பிரபு, ஊரகவளர்ச்சித்துறை, ஞா.ஞானராஜ், வருவாய்த்துறை, அ.சின்னத்தம்பி, சுகாதாத்துறை, பா.பேச்சியம்மாள், கல்வித்துறை. இணைச்செயலாளர்கள்: அ. சாம் டேனியல்ராஜ், கூட்டுறவுத்துறை, ஜெ. உமாதேவி, வருவாய்த்துறை, பி.செல்லத்துறை, சத்துணவுத்துறை, அ.அன்பு செல்வன், ஊரகவளர்ச்சித்துறை. தணிக்கையாளர்கள் : லா. அன்றோ, ஊரகவளர்ச்சித்துறை, லுh். ஜோ சில்வஸ்டர், கூட்டுறவுத்துறை, மாநில செயலாளர் சி.எஸ்.கிறிஸ்டோபர் நிறைவுறையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜெ. உமாதேவி நன்றியுரை கூறி மாநாட்டை நிறைவு செய்தார்.

**நீலகிரி**

14 ஆம் மாவட்ட மாநாடு 23.10.2021 (சனிக்கிழமை) மாவட்டத் தலைவர் தோ. முத்துக்குமார் தலைமையில் நடைப்பெற்றது. மாநாட்டை மாநிலத் துணைத்தலைவர் பெரியசாமி துவக்கவுரையாற்றினார், மாவட்ட செயலாளர் ஆசரா வேலை அறிக்கையும், பொருளாளர் ஆனந்தன் நிதி அறிக்கையையும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகளால் 25 முக்கிய தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் - கே.எச்.சலீம், செயலாளர் - கே. முத்துக்குமார், பொருளாளர் - ஆனந்தன், துணைத்தலைவர்கள்: சிவதாசன், பிரபாவதி, கந்தசாமி, இணைச்செயலாளர்கள்:ரமேஷ், இளங்கோவன், கெர்ஸ்வாம், விஜயா, தணிக்கையாளர்கள் : அய்யனார், கார்த்திக், மாநில செயற்க்குழு உறுப்பினர் : ரவிச்சந்திரன்,

மாநில செயலாளர் பரமேஸ்வரி நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைசெயலாளர் கெர்ஸ்வாம் நன்றியுரையாற்றினார்.

**கோயம்புத்தூர்**

கோயம்புத்தூர் மாவட்டம் 14ஆம் மாவட்ட மாநாடு 24.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) அரசு ஊழியர் சங்கம் கூட்ட அரங்கில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாநிலத் துணைத் தலைவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை மாநில பொதுச்செயலாளரும் ஏற்றினர். மாவட்டத் தலைவர் சி.எஸ். பால்ராஜ் தலைமை தாங்கினார். மாவட்டத் துணைத்தலைவர் எம்.சாமிநாதன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்டத் துணைத்தலைவர் ஏ. ஜெகந்நாதன் வரவேற்புரையாற்றினார். மாநிலத் துணைத்தலைவர் மு, சீனிவாசன் துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர்

ப. செந்தில்குமார் வேலை அறிக்கையும், மாவட்ட பொருளாளர் பி.நடராஜன் வரவு செலவு அறிக்கையும் வைத்தனர். மாவட்ட துணைத்தலைவர்கள் டி.சதீஷ், ஆர்.கணேசன் மற்றும் மாவட்ட இணைச் செயலாளர்கள் ஆர். பாக்கியராஜ், ஆர். மாலதிராணி, இ.வி. ரங்கராஜ் தீமானங்கள் முன்மொழிந்தனர். தென்மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பு இணை செயலாளர் வி.சுரேஷ், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநிலத் தணைத் தலைவர் எஸ். சந்திரன், நீதித்துறை ஊழியர் சங்கம் முன்னாள் மாநிலத்தலைவர் பி. கருணாகரன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் கே.பழனிசாமி, தமிழ் நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில பொருளாளர் ஏ.பிரகலதா வாழ்த்துரை வழங்கினர் மாநில பொதுச்செயலாளர் ஆ. செல்வம் நிறைவுரையாற்றினார். இணைச் செயலாளர் எஸ். சாராதாமணி நன்றியுரையாற்றினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்: சி.எஸ்.பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை. செயலாளர்: ப. செந்தில்குமார், வருவாய்துறை, பொருளாளர்: பி.நடராஜன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை. துணைத்தலைவர்கள்: டி.சதீஷ், வருவாய்துறை. ஏ.ஜெகந்நாதன் நெடுஞ்சாலைத்துறை. எம்.சாமிநாதன், பேரூராட்சி. ஏ.அம்சவேணி சத்துணவுத்துறை. இணைச் செயலாளர்கள்: ஆர்.மாலதிராணி, நெடுஞ்சாலைத்துறை, இ.வி ரங்கராஜ், கல்வித்துறை ஆர். பாக்கியராஜ் நீதித்துறை. சக்திவேல் வருவாய்துறை. தணிக்கையாளர்கள்: வி.சின்ன மாரிமுத்து நெடுஞ்சாலைத்துறை. ஆர்.ராமசாமி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை

**கிருஷ்ணகிரி**

கிருஷ்ணகிரி 7ஆம் மாவட்ட மாநாடு 24.10.2021 (ஞாயிற்றுகிழமை) அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை சங்க கட்டிடத்தில் நடைப்பெற்றது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்டத்தலைவர். பி. சந்திரன் அவர்களும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் கொடியை அச்சங்கத்தின் துணை பொதுச்செயலாளரும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத்தலைவருமாகிய மு.அன்பரசு அவர்களும் ஏற்றிவைத்தனர். மாவட்ட தலைவர் பி, சந்திரன், தலைமை தாங்கினார், மாவட்ட இணைச் செயலாளர் சி. கல்யாணசுந்தரம் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநில உதவி செயலாளர் BSNL UNION எம்.பாபு வரவேற்புரையாற்றினார்.

மாநில துணைத்தலைவர் ஜி. பழனியம்மாள் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஆர்.நடராஜன், ஸ்தாபன மற்றும் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் வி.தேவராஜ், நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தார். எம்.சரவணன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கம், எஸ்.சிங்காரவேலு, கூஹளுஹ ஜி.முருகன், TNCTEA ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநாட்டில் 14 கோரிக்கை தீர்மானங்கள், 12 நடவடிக்கை = தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் - பி. சந்திரன், செயலாளர் - ஆர். நடராஜன், பொருளாளர் - வி. தேவராஜ், துணைத்தலைவர்கள்: கே. ராமசந்திரன், வி. முரளி, எம்.சப்த மோகன், கே.ஜெயலட்சுமி, இணைச்செயலாளர்கள்: சி.கல்யாண சுந்தரம், சி.கோவிந்தராஜ், ஆர்.எம்.மஞ்சுளா, கே. ஜெகதாம்பிகா, தணிக்கையாளர்கள்: ஏ.மணி, எஸ்.முருகேசன். மாநில பிரதிநிதித்துவ பேரவை உறுப்பினர்களாக 19+2 = 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநாட்டில் 600 அரசு ஊழியர் மாத இதழ் சந்தா மற்றும் 100 எம்ப்ளாயீஸ் போரம் மாநிலத்தலைவரிடம் வழங்கப்பட்டது.

மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்கள் நிறைவு பேருரையாற்றினார்.

மாநில தணிக்கையாளர் ஏ,மணி நன்றி கூறி மாநாட்டினை நிறைவு செய்தார். மாநாட்டில் 156 பிரதி நிதிகளும், 30 பார்வையாளர்களும் கலந்துக் கொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர்.

**கரூர்**

கரூர் மாவட்டத்தின் 11 ஆம் மாவட்ட மாநாடு 30.10.2021 (சனிக்கிழமை) கரூர் அரசு

ஊழியர் சங்க கலைவாணர் அரங்கில் மாவட்டத் தலைவர் மு. சுப்ரமணியன் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது, மாவட்ட இணை செயலாளர் எல். பாலசுப்ரமணியன்அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

மாவட்ட துணைத்தலைவர் எம். எஸ் அன்பழகன் வரவேற்புரை நல்கினார். பொதுச்செயலாளர் ஆ.செல்வம் அவர்கள் துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் கெ.சக்திவேல், வேலை அறிக்கையும், பொருளாளர் பொன். ஜெயராம், வரவு செலவு அறிக்கையையும் வைத்தனர்.

மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ். அன்பழகன், சி.கண்ணன், மு. செல்வராணி, எல். பாலசுப்ரமணியன், க. இளங்கோ, ஆர். பிரேம்குமார். பெ. பிரகாஷ் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். CITU மாவட்ட தலைவைர் ஜி ஜீவானந்தம், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர், ஐ.ஜெயராஜ், தமிழ்நாடு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் து. சாமுவேல் சுந்தரப்பண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநிலத்துணைத்தலைவர் இரா. மங்கள பாண்டியன் நிறைவுறையாற்றினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் - மு, சுப்ரமணியன், மருத்துவத்துறை, செயலாளர்: கெ.சக்திவேல், வேளாண்மை பொறியியல்துறை பொருளாளர்:பொன். ஜெயராம், கல்வித்துறை துணைத்தலைவர்கள்: எம்.எஸ்.அன்பழகன், வருவாய்த்துறை, சி. கண்ணன், மருத்துவத்துறை, வி,டி, ராஜேந்திரன், சத்துணவுத்துறை, என், வெங்கடாச்சலம், ஊரகவளர்ச்சித்துறை, இணைச்செயலாளர்கள்: மு.செல்வராணி, மருத்துவத்துறை, கே. இளங்கோ, பொதுசுகாதாரம், கே.அறிவழகன், மாநகராட்சித்துறை, எல் பாலசுப்ரமணி, நெடுஞ்சாலைத்துறை, தணிக்கையாளர் : பி, பிரகாஷ், கூட்டுறவுத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட துணைத்தலைவர் சி.கண்ணன் நன்றியுரையாற்றினனார்.

இந்த மாநாட்டில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் டெல்லியில் கட்டப்பட்டு வரும் சுகுமால் சென் பவன் நிதியாக ரூ.20,000 மாநில மையத்திடம் வழங்கப்பட்டது. இம்மாநாட்டில் 105 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

**தருமபுரி**

தருமபுரி மாவட்ட 13ஆம் மாவட்ட மாநாடு 30.10.2021 (சனிக்கிழமை)அன்று பூபதி மண்டபத்தில் நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்ட இணைச்செயலாளர் பி.நாகராஜ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். BSNL ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் பி.கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார். மாநில துணைத்தலைவர் கோ.பழனியம்மாள் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் கே. புகழேந்தி, வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். சிஐடியு மாவட்டத்தலைவர் பி.ஜீவா, அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் எம்.பெருமாள், அரசு ஊழியர் சங்க கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் ஆர். நடராஜன், காப்பீட்டு ஊழியர் சங்க கோட்ட இணை செயலாளர் ஏ மாதேஸ்வரன், ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர் பி.எம். கௌரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள் மாவாட்ட நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

புதிய பென்ஷன் திட்டத்தை கைவிட வேண்டும், காலிப்பணியிடங்களை நிரப்பிட வேண்டும், சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் மற்றும் அவுட் சோர்சிங் முறைகளை கைவிட வேண்டும், முடக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் சரண்விடுப்பு வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட 15-ற்கும் மேற்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகளிர் அமர்வு: மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் எஸ்.செல்வி அறிக்கையினை வைத்தார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: எம். சுருளிநாதன், செயலாளர்: ஏ. சேகர், பொருளாளர்: கே.புகழேந்தி. துணைத்தலைவர்கள்: பி.எஸ். இளவேனில்,

சி. காவேரி, எஸ். குணசேகரன், டி. சண்முகம் இணைச்செயலாளர்கள்: ஜெயவேல், சி. அழகிரி, கே. நாகராணி, ஜே,பி. கார்த்திகேயன், தணிக்கையாளர்கள்: ஜி.முனிராஜ், எம்.முனிராஜ் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலத்தலைவர் மு. அன்பரசு, நிறைவு பேரூரையாற்றினார். 2021 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா 1602-ற்கான தொகை மாநில பொருளாளர் மு. பாஸ்கரன் அவர்களிடம் வழங்கப்பட்டது,

மாவட்ட துணைத்தலைவர் எஸ்.தமிழ்வாணன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது. இம்மாநாட்டில் 165 பேர் கலந்துக் கொண்டனர்.

**தஞ்சை**

தஞ்சை மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 30.10.2021 (சனிக்கிழமை) அன்று மாவட்ட தலைவர் எஸ்.கோதண்டபாணி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது.

மாவட்ட துணைத்தலைவர் சிவ. ரவிச்சந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலாளர் எ. செந்தில்குமார் வரவேற்புரையாற்றினார். மாநிலச்செயலாளர் உ. சண்முகம் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எ.ரெங்கசாமி, வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் கு.பாஸ்கரன், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர்.

தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் ஆர். கலியமூர்த்தி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மகளிர் அமர்வு: மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர் எஸ். செல்வி அறிக்கையினை வைத்தார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: எஸ்.கோதண்டபாணி, மோட்டார் வாகன பராமரிப்புதுறை, செயலாளர்: எஸ். விஜயகுமார், பேரூராட்சி, பொருளாளர்: என். சுபின், பொதுசுகாதாரம். துணைத்தலைவர்கள்: சிவ.இரவிச்சந்திரன்-வருவாய்த்துறை, எஸ். தமிழ்வாணன் -வருவாய்த்துறை, எஸ். செல்வி- கூட்டுறவுத்துறை, டி.ரவிச்சந்திரன், சத்துணவுத்துறை. இணைச்செயலாளர்கள்: ஆ.செந்தில்குமார்-மருத்துவத்துறை, எஸ். மகேஸ்-ஊரக வளர்ச்சித்துறை, எஸ்.அறிவழகன்- சத்துணவுத்துறை, எ. தமிழ்வாணன், கால்நடை பராமரிப்புத்துறை. தணிக்கையாளர்கள்: ஜெ.பலராமன் -வேளாண்மைத்துறை. ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநிலப்பொருளாளர் மு.பாஸ்கரன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

2021 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா 1602-ற்கான தொகை மாநில பொருளாளர் மு. பாஸ்கரன் அவர்களிடம் வழங்கப்பட்டது, மாவட்ட துணைத்தலைவர் எஸ். தமிழ்வாணன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது. இம்மாநாட்டில் 165 பேர் கலந்துக் கொண்டனர்.

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி மாவட்ட 12ஆம் மாவட்ட மாநாடு 30.10.2021 (சனிக்கிழமை) அன்று சங்க கட்டிடத்தில் ஜே. டானியல் காந்திராஜன் நினைவு அரங்கத்தில் நடைப்பெற்றது.

மாவட்டத்தலைவர் என்.பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் எஸ். செய்யதலி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத்தலைவர் எஸ். லீடன் ஸ்டோன் வரவேற்புரையாற்றினார்.

மாநாட்டை துவக்கி வைத்து மாநிலச்செயலாளர் சி.எஸ்.கிறிஸ்டோபர் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எஸ்.விஜயகுமார், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் என். சுபின், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் அல்போன்ஸ் மற்றும் மூட்டாவின் மாநில துணைத்தலைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

மகளிர் அமர்வு: மாவட்ட மகளிர் அமைப்பாளர் மைக்கேல் லில்லி புஷ்பம் அறிக்கை சமர்ப்பித்தார். BSNL சங்கத்தின் மாநில துணைத்தலைவர் இந்திரா அவர்கள் கருத்துரை வழங்கினார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தலைவர்: என். பாலகிருஷ்ணன், வருவாய்த்துறை, செயலாளர்: எஸ்.விஜயகுமார், பேரூராட்சி, பொருளாளர்: என்.சுபின், பொதுசுகாதாரம்,

துணைத்தலைவர்கள்: எஸ்,லீடன் ஸ்டோன்-மாநகராட்சி, எம்.மிக்கேல் ராஜ் - மருத்துவத்துறை, எம்.கல்பர்ட் சதீஷ்-கல்வித்துறை, ஆர்.சௌந்தரராஜன் - கதர்,

இணைச்செயலாளர்கள்: கே. சபரீஸ் - கூட்டுறவுத்துறை, எஸ். செய்யதலி, வருவாய்த்துறை, தணிக்கையாளர்கள் : ஏ. அசோகன், கல்வித்துறை, கே. பாபு, பேரூராட்சித்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாநில துணைத்தலைவர் என். வெங்கடேசன் அவர்கள் நிறைவுரையாற்றினார். மாவட்ட துணைத்தலைவர் என். கில்பர்ட் சதீஷ் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.

**திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தின் 14 ஆம் மாவட்ட மாநாடு 31.10.2021 (ஞாயிற்றுகிழமை) திருவாரூர் செல்வீஸ் nஉறாட்டலில் உள்ள டைமன்ட் அரங்கில் தோழர் எஸ், புஷ்பராஜ் நினைவரங்கத்தில் மாவட்டத் தலைவர் எம். ராஜமாணிக்கம் தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட இணை செயலாளர் டி. மணிவண்ணன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணைச்செயலாளர், எஸ் சுதாகர் வரவேற்புரை நல்கினார், மாநிலச் தலைவர் மு. அன்பரசு அவர்கள் துவக்கவுரையாற்றினார்.மாவட்ட செயலாளர் வெ, சோமசுந்தரம், வேலை அறிக்கையும், பொருளாளர் செ. பிரகாஷ், வரவு செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். மாவட்ட நிர்வாகிகள் வி. சிவக்குமார், வி. தட்சிணாமூர்த்தி, வி.சி.குமார், அ.தனபால், கே,எஸ்.செந்தில், ஏ.வி. சுப்ரமணியன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து வழிமொழிந்தனர், மாநில செயலாளர், உ. சண்முகம், முன்னாள் மாநில செயலாளர் கே. அகோரம், முன்னாள் மாநில துணைத்தலைவர், எம்.சௌந்தரராஜன், தமிழ்நாடு அனைத்து ஓய்வூதியர் சங்க மாநில செயலாளர் தோழர் குரு சந்திரசேகரன், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாநிலத்துணைத்தலைவர் இரா. மங்களபாண்டியன் நிறைவுறையாற்றினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: வெ.சோமசுந்தரம், வருவாய்த்துறை, செயலாளர்: செ.பிரகாஷ், கருவூலத்துறை,பொருளாளர்: எஸ். செங்குட்டுவன், வருவாய்த்துறை, துணைத்தலைவர்கள்: வெ. தட்சிணாமூர்த்தி, வருவாய்த்துறை, பி.விஜயன், கூட்டுறவுத்துறை, டி.மணிவண்ணன், மருத்துவத்துறை, கே.எஸ். செந்தில். ஊரக வளர்ச்சித்துறை, இணைச்செயலாளர்கள்: எஸ்.சுதாகர், வேளாண்மைத்துறை, பி.மகாலிங்கம், நெடுஞ்சாலைத்துறை, டி.ராஜசேகரன், ஊரக வளர்ச்சித்துறை, கே.பாலசுப்ரமணியன், சத்துணவுத்துறை, தணிக்கையாளர்கள். எஸ். மகேஷ், வருவாய்த்துறை, என்.தம்பித்துரை, வேளாண்மைத்துறை, ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட துணைத்தலைவர் பி. விஜயன் நன்றி கூறினார்.

இந்த மாநாட்டில் 74 பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம் 14ஆம் மாவட்ட மாநாடு 31.10.2021 (ஞாயிற்றுக்கிழமை) வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்டத் தலைவரும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை மாநிலத் துணைத் தலைவரும் ஏற்றினர். மாவட்டத் தலைவர் சே. ஜபருல்லா தலைமை தாங்கினார். மாவட்ட இணைச் செயலாளர் துரை. அ.ரங்கசாமி வரவேற்புரையாற்றினார். மாவட்டத் துணைத்தலைவர் அ.கருப்பையா அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநிலத் துணைத்தலைவர் இரா.மங்களபாண்டியன் துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரா. ரெங்கசாமி வேலை அறிக்கையும், மாவட்ட பொருளாளர் ஆ. பழனிசாமி வரவு செலவு அறிக்கையும் வைத்தனர்.மாவட்ட துணைத்தலைவர்கள் வி. கே.ஏ. மனோகரன், சு.குணசேகரன் மற்றும் மாவட்ட இணைச் செயலாளர்கள் ஜி.என். பாலமுருகன், ஆர். செல்வம், ட்டி.பத்மாவதி தீமானங்கள் முன்மொழிந்தனர். அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் எம்.முத்தையா, ஆயுள் காப்பீட்டு கழகம் என். கண்ணம்மாள், சி.ஐ.டி.யு மாவட்டச் செயலாளர்

ஏ.ஸ்ரீதர் வாழ்த்துரை வழங்கினர் மாநிலத் தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். மாவட்டத் தணைத்தலைவர் கே.குமரேசன் நன்றியுரையாற்றினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: சே. ஜபருல்லா, வருவாய்த்துறை. செயலாளர்: இரா.ரெங்கசாமி, சமூக நலத்துறை. பொருளாளர்: ரமா ராமநாதன், பொது சுகாதாரத்துறை. துணைத்தலைவர்கள்: க.குமரேசன், கால்நடை பராமரிப்புத்துறை. வி.கே.ஏ.மனோகரன், கூட்டுறவுத்துறை. சு.குணசேகரன், நூலகத்துறை. அ.கருப்பையா, நெடுஞ்சாலைத்துறை. இணைச் செயலாளர்கள்: ஆ.பழனிசாமி, வருவாய்துறை, ஜி,என். பாலமுருகன், நிலஅளவைத்துறை. ஆர். செல்வம், ஊரகவளர்ச்சித்துறை. பி.அன்பு சத்துணவுத்துறை தணிக்கையாளர்கள் - டி.நடராஜன், ஊரகவளர்ச்சித்துறை கே. ரவீந்திரன் சமூக நலத்துறை.

**மயிலாடுதுறை**

மயிலாடுதுறை மாவட்ட முதலாம் மாவட்ட மாநாடு 31.10.2021 (ஞாயிற்றுகிழமை) அன்று நடைப்பெற்றது, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்ட அமைப்பாளரும், அகில இந்தி மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் கொடியை hநில செயலாளர் அவர்களும் அவர்களும் ஏற்றிவைத்தனர்.

மாவட்ட அமைப்பாளர் து.இளவரசன் தலைமை தாங்கினார், த.ராஜேஷ்குமார் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். டி. சிங்காரவேலு வரவேற்புரையாற்றினார்.

மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். எம். நடராஜன், மாநாட்டு அறிக்கையினை சமர்ப்பித்து உரையாற்றினார், ஆர். கலா, வரவு செலவு அறிக்கை வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். நாகை, மாவட்ட செயலாளர், அ.தி. அன்பழகன், துணைத்தலைவர், கே.ராஜு, மேனாள் மாவட்ட தலைவர் டி. கணேசன், JAC பொதுச்செயலாளர் த, ராயர், TNROA மேனாள் செயலாளர் லெ. பிரேமசந்திரன், TNGPA மாவட்டத்தலைவர் வ, பழனிவேலு, TNRA மாவட்டத்தலைவர் செ.தென்னரசு, அஞ்சலக ஓய்வூதியர் சங்க பொறுப்பாளர் சாமி கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: ஆர். சிவபழனி, கூட்டுறவுத்துறை, செயலாளர்: து.இளவரசன், வருவாய்த்துறை, பொருளாளர் - ஆர். கலா, துணைத்தலைவர்கள்: எம்.நடராஜன், கிராம நிர்வாக அலுவலர், கே.ஜவஹர், நெடுஞ்சாலைத்துறை, சி. நல்லமுத்து, ஊரகவளர்ச்சித்துறை, எம். ராமசந்திரன், கிராம நிர்வாக அலுவலர். இணைச்செயலாளர்கள்: ஆர். முருகானந்தம், நில அளவைத்துறை, ஏ.சாந்தி, சத்துணவு, செ.பிச்சைப்பிள்ளை-வருவாய்த்துளை, எஸ். வெங்கடேசன், நெடுஞ்சாலைத்துறை. தணிக்கையாளர்கள் : கே.வெங்கடேஸ்வரன், கூட்டுறவுத்துறை, எஸ்,கே.லதா, சத்துணவு

மாநாட்டில் 500 அரசு ஊழியர் சந்தா தொகை மாநிலத்தலைவரிடம் வழங்கப்பட்டது.

பொதுச்செயலாளர், ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார்கள்.

புதிய மாவட்டதலைவர் ஆர்.சிவபழனி நன்றி கூறி மாநாட்டினை நிறைவு செய்தார். மாநாட்டில் 31 பெண்கள் உட்பட 75 ஊழியர்கள்கலந்துக் கொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர்.

**கடலூர்**

கடலூர் மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 31.10.2021 (ஞாயிற்றுகிழமை) அன்று கடலுhர், அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் (எம்.ஆர். அப்பன் இல்லம்) நடைப்பெற்றது, மாவட்ட தலைவர் எல்.அனந்தகிருஷ்ணன், தலைமை தாங்கினார், மாவட்ட துணைத்தலைவர் கு,கவியரசு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். இணை செயலாளர், இராம. வெங்கடாசலபதி வரவேற்புரையாற்றினார். மாநாட்டை துவக்கி வைத்து பொதுச்செயலாளர் ஆ.செல்வம் துவக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எல்.அரிகிருஷ்ணன், ஸ்தாபன மற்றும் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் எஸ். வெங்கடேசன், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர்.

குடியிருப்போர் நலச்சங்க பொதுச்செயலாளர், எம். மருதவாணன், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் மாவட்ட தலைவர் என். காசிநாதன், மாவட்ட துணைத்தலைவர், எஸ்

கருணாகரன், தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்க மாநில துணை தலைவைர் பா.ஆசைத்தம்பி, தமிழ்நாடு அங்கன்வாடி பணியாளர் சங்க மாநில தலைவர் வி. அனுசுயா, தமிழ்நாடு மருத்துவத்துறை ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத்தலைவர் வி.ஆர். அய்யாசாமி, தாநாசஊ சங்க மாவட்ட கன்வீனர் சி. மச்சேந்திரன், எய்ட்ஸ் கட்டுப்பாட்டு ஊழியர் சங்க மாநில செயலாளர்செல்ல சுப்ரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: டி.ரவிச்சந்திரன், செயலாளர்: எல். அரிகிருஷ்ணன், பொருளாளர்: எஸ். வெங்கடேசன், துணைத்தலைவர்கள்: இராம. வெங்கடாஜலபதி, கு.கவியரசு, கே.குமார், வீரமணி, இணைச்செயலாளர்கள்: எஸ். பாலகிருஷ்ணன், ஆர்.ரெத்தினகுமரன், கே. இரவி, ஆர்.தமிழ்செல்வன்,

மாநில பொருளாளர் மு. பாஸ்கரன்அவர்கள் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட இணை செயலாளர் கே. இரவு நன்றி கூறி மாநாட்டினை நிறைவு செய்தார். மாநாட்டில் 73 பெண்கள் உட்பட 150 ஊழியர்கள் கலந்துக் கொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர்.

**கள்ளக்குறிச்சி**

கள்ளக்குறிச்சி மாவட்ட முதலாம் மாவட்ட மாநாடு 31.10.2021 (ஞாயிற்றுகிழமை) அன்று கள்ளக்குறிச்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைப்பெற்றது,

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்டத்தலைவர் எல். அனந்தகிருஷ்ணன் அவர்களும் அகில இந்தி மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் கொடியை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் இரா.ந. நம்பிராஜன் அவர்களும் ஏற்றிவைத்தனர்.

மாவட்ட தலைவர் எல்.அனந்தகிருஷ்ணன், தலைமை தாங்கினார், மாவட்ட இணைச் செயலாளர் எ.வேலு அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத்தலைவர் டி. வீரபுத்திரன் வரவேற்புரையாற்றினார்.

மாநில செயலாளர் இரா.ந. நம்பிராஜன் துவக்கவுரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் கே.மகாலிங்கம், ஸ்தாபன மற்றும் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் பி.ரவி, வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். வி.நாகராஜன், முன்னாள் மாவட்ட தலைவர், ரஹீம், மாநில துணைத்தலைவர் TNPTE, வேலாயுதம், கோட்ட துணைத்தலைவர், LIC ஊழியா சங்கம், செந்தில், மாவட்ட செயலாளர் CITU, கல்வி பெருமாள், முன்னாள் மாவட்ட துணைத்தலைவர், ஆர். தசரதன், மாவட்ட தலைவர், TNROA, தா. கொளஞ்சிவேலு, மாவட்ட தலைவர், TNR-DOA, வி.ரங்கசாமி, மாவட்ட தணிக்கையாளர் TNRDOA, முத்து மாநில துணைத்தலைவர் TNPTF, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மகளிர் அமர்வு: மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ஜி. சாவித்திரி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. விஜயராணி, காஞ்சனா மேரி, எஸ். சுதாமற்றும் மஞ்சுளா ஆகியோர் விவாதித்தனர். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: எல். அனந்தகிருஷ்ணன், வருவாய்த்துறை, செயலாளர்: கே.மகாலிங்கம், பொது சுகாதாரத்துறை, பொருளாளர் - பி.ரவி, பொது சுகாதாரத்துறை, துணைத்தலைவர்கள்: டி,கொளஞ்சி வேலு, ஊரகவளர்ச்சித்துறை, எம். ராஜேந்திரன், பேரூராட்சித்துறை, டி, வீரபுத்திரன், ஊரக வளர்ச்சித்துறை, கே. செந்தில்முருகன், நில அளவைத்துறை, இணைச்செயலாளர்கள்: எ.வேலு, சமூகநலத்துறை, எ.சாமிதுரை, நெடுஞ்சாலைத்துறை, வி.ரங்கசாமி, ஊரகவளர்ச்சித்துறை, வி. விஜயராணி, கிராம சுகாதார செவிலியர், தணிக்கையாளர்கள்: யாசின், TNRDOA, பி.முத்து, நெடுஞ்சாலைத்துறை, மாநாட்டில் 300 அரசு ஊழியர் சந்தா தொகை மாநிலத்தலைவரிடம் வழங்கப்பட்டது.

மாநிலத் துணைத்தலைவர் தோழர் சீனிவாசன் அவர்கள் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட இணை செயலாளர் ஏ,சாமிதுரை நன்றி கூறி மாநாட்டினை நிறைவு செய்தார். மாநாட்டில் 74 ஊழியர்கள்கலந்துக் கொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர். ●

# பாரதி கண்ட யுகப்புரட்சி

தெ. வாசுகி

அன்று நவம்பர் 6, 1917 காலை 11.00 மணிக்கு “தற்காலிக அரசாங்கத்தை வீழ்த்துக!” என்ற அறைகூவலைத்தாங்கி அவசர அவசரமாக அச்சிடப்பட்ட “தொழிலாளர் பத்திரிக்கை”வெளிவந்தது. லெனின் “நிலைமை மிகவும் மோசமாக உள்ளது எழுச்சியை உடனே தொடங்காவிட்டால் அது மிகப்பெரிய நாசமாகும்” என்று மத்தியக் குழு உறுப்பினர்களுக்கு கடிதம் கொடுத்தனுப்பினார். லெனின் நேரிடையாகவே புரட்சிக்கு வழிகாட்ட ஆரம்பித்தார். “நாம் இப்பொழுது எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை மாநாடுகளோ, காங்கிரஸ்களோ தீர்மானிக்காது. அது முற்றிலும் மக்களால் மட்டுமே வெகுஜனங்களால் மட்டுமே ஆயுதந்தாங்கிய மக்களின் போராட்டத்தின் மூலமே தீர்க்கப்பட முடியும்” என்றார்.

மறுநாள் நவம்பர் 7 உலக வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான ரஷ்யபுரட்சி ஆரம்பித்து விட்டது. தொலைபேசி நிலையங்கள், தந்தி அலுவலகம், வானொலி நிலையம், மின்சார நிலையங்கள், ரயில்வே ஸ்டேசன்கள், அரசாங்க வங்கிகள் ஆகிய அனைத்தையும் ஆயுதமேந்திய செந்தொண்டர் படையினரும், மாலுமிகளும், இராணுவத்தினரும் கைப்பற்றினர். தற்காலிக அரசாங்கத்தின் தலைமை பீடமான குளிர்கால அரண்மனையை புரட்சி வீரர்கள் முற்றுகையிட்டனர். முதலாளித்துவ அரசாங்கத்தை தூக்கியெறிந்து உலக வரலாற்றில் முதன் முதலாக தொழிலாளர் அரசாங்கம் நிறுவப்பட்டது.

அன்றைய தினம் சோவியத் கூட்டத்தில் புரட்சி நாயகன் லெனின் """"தொழிலாளர்கள் விவசாயிகளின் புரட்சி சாதிக்கப்பட்டுவிட்டது. இந்த புரட்சியானது இறுதியில் சொசலிசத்தின் வெற்றிக்கு இட்டுச்செல்லும்"" என்று சூளுரைத்தார்.



இந்தியாவின் புரட்சி கவிஞர் மகாகவி பாரதி ரஷ்யாவில் புரட்சி வெடித்து பாட்டாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியதை மனமகிழ்ந்து துள்ளி குதித்து “ஆஹாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி” எனும் பாடலை பாடி ரஷ்ய புரட்சியை வாழ்த்துகிறார்.

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்!
குடியரசென்று உலகறியக் கூறிவிட்டார்.
அடிமைக்குத் தலையில்லை; யாருமிப்போது
அடிமையில்லை அறிகவொன்றார்
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுகமாதோ!

என்று ஆவேசமாக பாடுகிறார். சோசலிச கொள்கை ஒன்றுதான் மனிதர்களுக்குள் புதைந்து கிடக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து சமத்துவம் மலரச்செய்யும் என்றும் இக்கொள்கை மெல்ல மெல்ல உலகம் முழுவதும் பரவியே தீரும் என்று உறுதியாக நம்பினார். ரஷ்யாவில் பெண்ணடிமை நீக்கப்பட்டு ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாய் வாழத் தொடங்கியது பாரதிக்கு அளவிலா ஆனந்தத்தை கொடுத்தது. வெள்ளையர்களிடம் அடிமைபட்டு கிடந்த இந்தியா விடுதலை பெறவேண்டும் என்றால் இந்தியாவிலும் புரட்சி மலரவேண்டும் என்று நினைத்தார். மனிதரில் ஏற்றத்தாழ்வுகள் நீங்க வேண்டும். பொதுவுடமைக் கோட்பாடுகள் மீது பாரதிக்கு அளவுகடந்த மதிப்பும் பற்றும் உண்டாக்கியது. “முப்பது கோடி ஜனங்களில் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை” என்றும் “எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை எல்லாரும் இந்நாட்டு மன்னர்” என்றும் இந்தியா விடுதலை பெற்று பொதுவுடைமை பூங்காவாக மலரவேண்டும் என்றும் விரும்பினார்.

அதே நேரத்தில் ரஷ்ய புரட்சியின் தாக்கம் இந்திய விடுதலைக்கு வித்திட்டது என்பதை அறிந்த லெனின் மே ,1920 ல் இந்திய புரட்சிகர சங்கத்திற்கு விடுத்த வாழ்த்துச் செய்தியில் “அந்நிய, உள்நாட்டு முதலாளிகளின் சுரண்டலிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் விடுதலையும் சுய நிர்ணயம் என்ற கொள்கைகள், சுதந்திரத்துக்காக வீர மிக்க போராட்டத்தை நடத்தி வருகின்ற முற்போக்கான இந்தியர்கள் மத்தியில் உடனடியாக ஆதரவை அதிகம் பெற்றன என்பதை தெரிந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலுள்ள தொழிலாளி விவசாயி விழித்தெழுந்து வருவதை ரஷ்யாவின் உழைக்கும் மக்கள் திரளினர் குன்றாத ஆர்வத்தோடு கவனித்து வருகின்றனர். உழைக்கும் மக்களின் ஸ்தாபன அமைப்பும் கட்டுப்பாடும் விடா முயற்சியும் உலக முழுவதுமுள்ள உழைக்கும் மக்களோடு அவர்களுடைய ஒருமைப்பாடும் இறுதியில் வெற்றியை எற்படுத்துவதற்கு முன்னறிகுறியாகும் என்றும் இறுதியில் சுதந்திரம் என்ற பொது லட்சியத்துக்காக இந்தியா, சீனா, கொரியா, ஜப்பான், பாரசீகம் மற்றும் துருக்கியின் தொழிலாளியும் விவசாயியும் கைகோர்த்து ஒன்றாக அணிவகுத்து செல்லும்போது மட்டுமே சுரண்டல் காரர்களுக்கு எதிரான தீர்மானகரமான வெற்றி உறுதிப்படும். சுதந்திர ஆசியா வாழ்க! என்று வாழ்த்துகிறார்.

புரட்சி கவிஞர் பாரதி தனது இந்தியாவின் விடுதலைக்கு மட்டும் எண்ணாமல் மனுதகுலம் முழுமைக்குமான ஆதிபொதுவுடைமை சமுதாயம் (கிருதயுகம்) உலகெங்கும் மலரவேண்டும் என்று விரும்பினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை துணிவோடு எதிர்கொண்ட பாரதியும், புதிய வரலாற்றுச் சூழலில் புரட்சிகர தத்துவத்தை துணிவோடு ஆக்க பூர்வமாக உலகுக்கு அளிக்க முடியும் என்பதை நிரூபித்துக்காட்டிய லெனினும் இருபதாம் நூற்றாண்டின் ஆகச்சிறந்த யுக புரட்சியாளர்கள். ●

அஞ்சலி

# மேடை கலைவாணர்



# தோழர் நன்மாறன்

மேடை கலைவாணர். என்று எல்லோராலும் அழைக்கப்படும் அன்பு தோழர் நன்மாறன். (பத்தாண்டுகள் சட்டமன்ற உறுப்பினர்.) உடல் நலக்குறைவால் 28.10.2021 அன்று மதுரையில் இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பு தோழரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம் தோழரின்இறுதிச் சடங்கு நாளை (29.10.2021) மாலை 4 மணிக்கு நடைபெற்றது.

எளிமையின் சின்னம், மேடைக் கலைவாணர் தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்... வலிமையான வார்த்தைகளை கூறிச் சென்ற பாட்டாளிகளின் கூட்டாளி, இனி என்று காண்போம் உனை?... இயக்கத்திற்காக இயங்கிய இமயமே... என்றும் உங்கள் வழியில்....

- மாநில மையம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

கட்டுரை

# லோக் ஆயுக்தா அமைப்பும், அதிகார வரம்பும்



- இரா.மங்களபாண்டியன்

இந்தியா முழுமையிலும் உள்ள ஊழல் எதிர்ப்பு இயக்கங்கள் கொடுத்த அழுத்தத்தால்; கடந்த 2013-ஆம் ஆண்டு மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசு ‘லோக்பால்” மற்றும் ‘லோக் ஆயுக்தா” சட்டத்தை நாடாளுமன்றத்தில் இயற்றி சனவரி 2014 முதல் அமலுக்கு வருவதாக மத்தியஅரசு அறிவித்தது.

அச்சட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலமும், அம்மாநிலத்துக்கான ‘லோக் ஆயுக்தா” சட்டத்தை ஓராண்டுக்குள் இயற்ற வேண்டும். ஆனால் பல மாநிலங்கள் அதன்படி சட்டம் இயற்றவில்லை. இது தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம், 10-07-2018க்குள் தமிழ்நாடு அரசு இது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகளை தெரிவிக்கக் உத்தரவிட்ட நிலையில் 09.07.2018 அன்று அவசர அவசரமாக மசோதாவை சட்டசபையில் தாக்கல் செய்து, அன்றே விவாதம் ஏதுமின்றி ‘தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டத்தை” தமிழக அரசு நிறைவேற்றிவிட்டது.

சட்டம் இயற்றப்படுவதற்கு முன் மக்கள் அமைப்புகளின் - குறிப்பாக ஊழல் எதிர்ப்பு இயக்கங்கள், சிவில் உரிமை அமைப்புகள், பல்வேறு இயக்கங்கள், வணிகர் மற்றும் தொழில் அமைப்புகள், கல்வி நிலையங்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றின் கருத்துகள் கேட்கப்படவில்லை. சட்டசபையிலும் இது தொடர்பான விவாதம் நடைபெறவில்லை.

சட்ட மன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி, உரிய விவாதம் நடைபெற உத்தரவாதம் செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஏற்கப்படாததையொட்டி, எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்த நிலையில் போதிய விவாதமின்றி இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது ஜனநாயக மாண்புகளுக்கு முற்றிலும் விரோதமானது.

தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ள சட்டம் லோக் ஆயுக்தா அமைப்பை உருவாக்கும் என்று சொல்கிறது. ஆனால் அதற்கான காலம் வரையறை செய்யப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

லோக் ஆயுக்தா அமைப்பு என்பது ஒரு தலைவரின் கீழ், நான்கு உறுப்பினர்களைக் கொண்டு செயல்படும். உயர்நீதிமன்ற நீதிபதியாக இருப்பவரோ அல்லது இருந்தவரோ தலைவராக இருப்பார். அப்படியின்றி ஊழல் தடுப்புக் கொள்கை, பொது நிர்வாகம், விழிப்புணர்வு, நிதி மற்றும் சட்டத் துறையில் 25 ஆண்டுகள் முன் அனுபவத்தை பெற்றுள்ள நபர்கூட தலைவராக இருக்கலாம். அதாவது, தலைவராக நியமிக்கப்படுபவர் அரசியல்வாதியாகவோ அல்லது அரசு அலுவலராகவோ இருக்கலாம்.

நான்கு உறுப்பினர்களில் இருவர் நீதித் துறையைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். உயர் நீதிமன்ற நீதிபதியாக இருப்பவரோ, இருந்தவரோ அல்லது 25 ஆண்டுகள் மாநில நீதித் துறையில் சிறப்பான முறையில் பணியாற்றி முன்அனுபவம் பெற்றவரோ நீதித் துறையைச் சேர்ந்த உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மற்ற இரு உறுப்பினர்கள், ஊழல்

தடுப்புக் கொள்கையில், பொது நிர்வாகத்தில், விழிப்புணர்வில், நிதி மற்றும் சட்டத்தில் 25 ஆண்டுகள் முன் அனுபவத்தை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதாவது அரசியல்வாதியோ, அரசு அலுவலரோ உறுப்பினராக இருக்கலாம்.

லோக் ஆயுக்தாவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மூன்று நபர்களைக் கொண்ட தெரிவுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு, ஆளுநரால் நியமிக்கப்படுவார்கள். அந்தத் தெரிவுக் குழுவின் தலைவர் முதலமைச்சர் ஆவார். அக்குழுவில் உள்ள மற்ற இரு உறுப்பினர்களில்; ஒருவர் சபாநாயகர் மற்றவர் எதிர்கட்சித் தலைவர் ஆவார்கள். அதாவது இக்குழுவின் பெரும்பான்மை ஆளும் கட்சியாக இருப்பதால், ஆளும் கட்சியின் விருப்பப்படி இந்த நியமனங்கள் இருக்கும் என்பது புரிந்து கொள்ளக்கூடியது. அதாவது, மாநில அரசின் மற்றொரு துறை போலதான் லோக் ஆயுக்தா செயல்படும். இது சுதந்திரமான அமைப்பு அல்ல.

அரசியல்வாதிகள் மற்றும் அலுவலர்களின் ஊழலை விசாரணை செய்யும் அமைப்பாக லோக் ஆயுக்தா இருப்பதால், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மூத்த நீதிபதிகள் லோக் ஆயுக்தா உறுப்பினர்களை தெரிவு செய்யும் குழுவில் பெரும்பான்மையாக இருக்க வேண்டும்.

லோக் ஆயுக்தாவின் செயலாளரும் விசாரணை இயக்குநரும் அரசால் அனுப்பப்படும் பெயர்ப் பட்டியலிலிருந்து நியமிக்கப்படுகிறவர்கள்தான் என்ற நிலையில் லோக் ஆயுக்தா என்ற அமைப்பு எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த பணியில் திறம்பட செயல்பட வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பாகும். ●







-வரவேற்புக் குழு

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com